மன்றம்

இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.

மலர் 5 | 1–4–57 | இதழ் 23

அவர் போராடியது . . .

"இன்றுள்ள அதிகாரம் லட்சக்கணக்கான மக்களை வாட்டி, ஒரு சிலரைமட்டும் தட்டிக்கொடுக்கிறது. இந்த ஆட்சியின் குறிக்கோளாகப் பொதுநலமல்ல, பதவிப் பேராசை இருக்கிறது. இத்தகைய அரசியல் அமைப்பை எதிர்த்துதான் நான் முழுமூச்சுடன் போராடுகிறேன்."

—அன்று வெள்ளையர் ஆட்சியைப்பற்றி அண்ணல் காந்தியார் அவ்வாறு கூறினார். அந்த நிலை இன்று மாறியுள்ளதா?

நாடு புதிய பைசா 25 ★ மாதமிருமுறை ★ வெளிநாடு புதிய பைசா 3

சிற்றூர்களில் "எலெக்ஷன்"

★

திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் முதல்தடவையாக ஈடுபட்ட பொழுது, தேர்தலில் ஓட்டுக்கேட்பதுமட்டுமல்ல, தேர்தல் என்றால் என்ன? ஓட்டுமுறை எப்படி? அதன் பெருமை - பொறுப்பு என்ன? என்றெல்லாம் விளக்கவேண்டியிருந்தது. அறியாமை அதிகமாக நிலவுகிறபடியால், கண்மூடித் தனமாக இதுவரை ஓட்டுக்கள் போடப்பட்டிருக்கின்றன. முதல்தடவையாகக் கழகம் தேர்தலுக்கு வந்தபொழுது, தாங்கள் யார்? தங்களுடைய கொள்கைகள் என்ன? என்பதை விளக்குவதுமட்டும் போதாததாக இருந்தது. ஜனநாயகம், ஓட்டு முறையின் அவசியம், அதன் அருமை இவற்றை விளக்கிச் சொல்லிவிட்டு, பிறகு கழகத்தின் கொள்கைகளைச் சொல்லி ஓட்டுப் பெறவேண்டியிருக்கிறது. இதற்கு முன்னதாக வந்த தேர்தலில் ஈடுபட்டிருந்த பெரும் அரசியல் கட்சிகள் அந்தவகை ஜனநாயக உணர்வை ஊட்டவில்லை. ஆளுங்கட்சி, மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்குப் பணபலத்தை நம்பியதால், மக்களிடையே வாக்குரிமையின் மேன்மையைப்பற்றிப் பேசவில்லை; மக்களாட்சி முறையின் அடிப்படையில் வாக்குரிமைகளைப் பெறவில்லை. தேர்தல்கள் பல வந்திருந்தபோதிலும், இன்னும் "தேர்தல்", "ஓட்டு" இவைகளைப்பற்றித் தெளிவான விளக்கம் மக்களுக்கு உண்டாகவில்லை.

அறிஞர் அண்ணா அவர்கள் அவர் தொகுதியில் தேர்தல் சுற்றுப் பயணத்தின்போது, ஒரு சிற்றூருக்குப் போயிருந்தார். அங்கு ஒரு குடிசைக்குப் பக்கத்தில் அண்ணா அவர்கள் உட்கார்ந்திருந்தார். அப்பொழுது ஒரு கிழவி அந்தப் பக்கம் வந்தார்கள்.

"நீங்கள் யார்?" என்று கிழவி கேட்டாள்.

"எலெக்ஷனுக்கு வந்திருக்கிறோம்" என்று அண்ணா சொன்னார்.

கிழவி சற்று யோசித்தாள்; பிறகு புரிந்துகொண்டவள்போல, "எலெக்டிரிக் லைட் போட வந்திருக்கிறீங்களா?" என்றாள்.

"இல்லையம்மா! எலெக்ஷன் - ஓட்டுப் போடுவது. ஓட்டுக் கேட்க வந்திருக்கிறோம்."

"அதுதான் ஐந்து வருசத்துக்கு முன்னே வந்து வாங்கிட்டுப் போயிட்டாங்களே!"

"மறுபடியும் இப்பொழுது ஓட்டுக் கிடைக்கும். அதை உங்களுக்கு யார் பேரில் நம்பிக்கையிருக்கிறதோ, அவர்களுக்குப் போடலாம்."

"நீ நிக்கிறியா?"

"ஆமாம்!"

"சரி, ஓட்டைக் கொடு! உனக்கேத் தந்துடறேன்!"

தேர்தல் நாளன்று, தேர்தல் சாவடியில்தான் ஓட்டுச் சீட்டைத் தருவார்கள் என்றெல்லாம் அண்ணா அவர்கள் விளக்கிச் சொல்லவேண்டியிருந்தது.

தேர்தலில் ஓட்டுக் கேட்பதற்கு முன்னால், தேர்தல், ஓட்டு என்பவைகளைப்பற்றி மக்களுக்கு விளக்கிவிட்டு, பின்புதான் நாம் தேர்தலில் நிற்கும் கொள்கைகளைப்பற்றிச் சொல்லவேண்டியிருந்தது.

மன்றம்

இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.

மலர் 5 ☆ (1—4—57) ☆ இதழ் 23

முதல் வெற்றிகள்!

பொதுத்தேர்தல் வந்தது, நடந்தது, சென்றுவிட்டது!

பொதுத்தேர்தல் முடிவுகள் சென்னை மாநிலத்தைப் பொறுத்தவரை முற்றிலும் வெளியிடப்பட்டுவிட்டன.

மூன்று மாதகாலமாக, மாநிலத்தில் வீசிய அரசியல் பரபரப்பு அடங்கிவிட்டது. அமைதி-கடுமையான உழைப்புக்குப்பின் ஏற்படுகிற அயர்வு நிலவுகிறது.

"தேர்தலில் ஈடுபடுவது, ஒரு அரசியல் கட்சி செய்யவேண்டிய ஜனநாயகக் கடமைகளில் ஒன்று" என்று அறிஞர் அண்ணா அவர்கள் இரண்டாவது மாநில மாநாட்டில் பேசும்பொழுது குறிப்பிட்டார்கள். அந்த ஜனநாயகக் கடமையை திராவிடமுன்னேற்றக்கழகத்தினர் உற்சாகத்துடன் செய்து முடித்துள்ளனர். பல இடங்களில் தங்களது சக்தியையும் மீறி நின்று கடமையாற்றியுள்ளனர். கடமையுணர்ச்சியில் எவ்விதக் குறையுமின்றி, கழகத்தோழர்கள் பணியாற்றினர்.

திராவிடமுன்னேற்றக் கழகம் முதல்தடவையாக தேர்தல் களத்தில் அடியெடுத்து வைத்தது. தேர்தல் என்றதும் அந்தச் செப்பிடு வித்தையில் கைதேர்ந்த-இன்னும் சொல்லப்போனால் அந்த தேர்தல் வித்தை ஒன்று மட்டும் தெரிந்த காங்கிரசுத் தலைவர்கள் பண முட்டைகளைத் தேடித்தேடிப் பிடித்துவந்து, காங்கிரசு முத்திரையைக் குத்தி, களத்தில் தங்கள் ஆட்களாக நிறுத்தினார்கள். கோடிசுவரர்கள், ஜமீன்தார்கள், பெரியதனக் குடும்பத்தினர்—அவர்களது பழைய நடவடிக்கைகள் எப்படியிருந்தபோதிலும் "அவரைப் போட்டால் வெற்றி பெறலாம்!" "இவரைப் பிடித்தால் பணம் தாராளமாகக் கிடைக்கும்! என்று யார் யார் கிடைத்தாலும் அவர்களையெல்லாம் இழுத்துக் காங்கிரசுத் தலைமை தனது அபேட்சகர்களாக நிறுத்தியது. பணத்தை எடைபோட்டு, காங்கிரசு தன் அபேட்சகர்களைப் பொறுக்கியது. பணத்தை எண்ணிப்பார்த்து, தனக்கு வரக்கூடிய ஓட்டுக்களை அது எண்ணிப் பார்த்துக்கொண்டது. தேர்தல் தரகர்களை அனுப்பி ஓட்டுகளைச் சேகரித்தது. ஆனால் அவ்வாறு பண பலத்தை ஏராளமாகக் குவித்துக்கொண்டு நின்ற காங்கிரசுக்கு எதிராகப் போட்டியிட்ட திராவிட முன்னேற்றக் கழகம், மக்கள் பலத்தை நம்பி, கூட்டத்தின் மூலம் சுவரொட்டிகள் மூலம் பத்திரிக்கைகள் மூலம் தரப்படும் கொள்கைகளுக்கு ஏற்படும் ஆதரவை நம்பி தேர்தலில் நின்றது. இந்தியாவில் எங்கும் இல்லாதவாறு, இங்கு கூட மற்றக் கட்சியினரால் தரப்படாத அளவு அரசியல் பிரசாரம் செய்து திராவிடமுன்னேற்றக்கழகம் வாக்குகளைக்கேட்டது. இதற்குமுன் சென்னை மாநிலம் கண்டிராத அளவு, அரசியல் விழிப்பு—ஜனநாயக உரிமை உணர்வு இந்தத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தினரால் உண்டாக்க முடிந்தது.

திராவிட முன்னேற்றக் கழகத்தினரின் தேர்தல் கூட்டங்களில் அரசியல் பேசப்பட்டது, ஜனநாயக முறைகள் கவனப்படுத்தப்பட்டன, திராவிடத்தின் பொருளாதார அரசியல் உரிமைகள் வலியுறுத்தப்பட்டன. திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றுதான் அரசியல்ரீதியாகப் பொதுத்தேர்தலில் ஈடுபட்டது. இதை நாம்மட்டும் சொல்லவில்லை, இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் தேர்தல் அமளியில் சிக்கியிருந்தவர்கள் ஆச்சரியப்படும் விதத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் பிரசாரம் இருந்தது. டெல்லியிலிருந்து வருகிற "இந்துஸ்தான் ஸ்டாண்டர்டு" என்ற பத்திரிக்கை "அரசியல் ரீதியாக நடக்கிற தேர்தலைப் பார்க்க விரும்புவோர், சென்னைக்குச் சென்று திராவிட முன்னேற்றக் கழகத்தினர் நடத்துகிறதேர்தலை பார்க்கவேண்டும்!" என்று வியப்புடன், மற்ற இடங்களில் தேர்தலை நடத்துகிற அரசியல் வாதிகளுக்குச் சொல்லியது. "இந்துஸ்தான் ஸ்டாண்டர்டு" நம்முடைய பத்திரிக்கையல்ல, வடநாட்டில் மாற்றுக் கட்சியினரால் நடத்தப்படும் பத்திரிகை, நம்முடைய அடிப்படைக் கொள்கைகளை ஒத்துக்கொள்ளாத பத்திரிகை. அத்தகைய பத்திரிகையே தெரிந்து வியந்து கூறுமளவுக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் பிரசாரம் நடைபெற்றிருக்கிறது. இதை இங்கு எதற்குக் குறிப்பிடுகிறோமென்

ருல், திராவிட முன்னேற்றக் கழகம் தனது ஜனநாயகக் கடமையை ஆற்ற தேர்தலில் ஈடுபட்டது; அந்தக் கடமையை அரசியல் ரீதியில்—நல்ல முறையில், மாற்ருரும் வியந்து கூறுமளவில் ஆற்றியிருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகம் சென்னை மாநில சட்டசபைக்கு மொத்தம் 122 இடங்களில் தனது அபேட்சகர்களை நிறுத்தியது; டில்லி மக்கள்சபைக்கு 13 இடங்களில் அபேட்சகர்களை நிறுத்தி வைத்தது. இவற்றையல்லாமல் சென்னை சட்டசபைக்கு 8 பேர்களையும், டில்லி மக்கள் சபைக்கு 6 பேர்களையும் ஆதரவாளர்களாக அது ஆதரித்தது.

திராவிட முன்னேற்றக் கழகம் மிகப் பலவான இடங்களில் போட்டியிட்டபொழுது, போட்டியிட்ட இடங்களையெல்லாம் பிடித்துவிட முடியும் என்று எண்ணவில்லை, எப்படியாவது பிடித்துவிடவேண்டும் என்ற விருப்பும் கொள்ளவில்லை. முதற்படியாக, எத்தகைய எதிர்ப்புமில்லை என்று எக்காளமிட்டுக்கொண்டிருந்த காங்கிரசுக்குப் பலமான எதிர்ப்பை உண்டாக்கக் கழகம் நினைத்தது, அதில் வெற்றி பெற்றது. சர்வாதிகார போக்கில் நாடு விழுந்துவிடாமல், ஜனநாயகப் பண்பாட்டைக் கழகம் பாதுகாத்தது. பல இடங்களில் அது எதிர்த்துப் போட்டியிட்டபோதிலும், சில இடங்கள் வெற்றிக்கு வாய்ப்பான இடங்களாகப் பகுத்துக்கொண்டது. சில இடங்களில் காங்கிரசுக்கு எதிர்ப்புத் தரவேண்டுமென்பதற்காகப் போட்டியிட்டது, சில இடங்களில் காங்கிரசின் சக்தி மற்ற இடங்களுக்குச் செல்லாதவாறு தேக்கி வைக்கப் போட்டியிட்டது; சில இடங்களில் கழகக் கொள்கைகளைப் பரப்ப, எதிர்காலத்தில் நல்ல சூழ்நிலையை உண்டாக்க, வரப்போகும் தேர்தல்களுக்கு நம்மைப் பழக்கிக்கொள்ளவே போட்டியிட்டது. முதல் தடவையாகப் போட்டியிட்ட காரணத்தினுல், காங்கிரசுக்காரர்கள் ஏவிய மாயா சக்திகளை — மறைவு வேலைகளை முன்னதாக அறிந்து அவற்றைத் தடுத்திடும் அனுபவம் இல்லாது போயிற்று. தேர்தல் முடிந்ததும் அவர்கள் செய்த சூழ்ச்சிகள் தெரிகின்றனவேயன்றி, தேர்தல் காலத்தில் அந்தச்சூழ்ச்சிகளை முறியடித்து வெற்றி காணுவதற்கான அமைப்பும் முன்னறிவும் நம்மிடம் இல்லை. தூரத்திலிருந்த பல இடங்களில் நமது கழகத் தோழர்கள் உற்சாகத்துடன் சலிக்காமல் உழைத்த போதிலும் ஒழுங்கு படுத்தப்பட்ட முறையில் பணியாற்ருத காரணத்தால் அந்த இடங்களில் நாம் வெற்றிகாண முடியாமற் போயிற்று.

பல இடங்களில் நாம் நல்ல அரசியல் விழிப்பை உண்டாக்கி, மக்களின் ஆதரவைப் பெருக்கிய நிலையில், தேர்தலுக்கு முதல் நாள் இரவு குள்ளநரிகள் பணமூட்டைகளுடன் உலவ ஆரம்பித்தன; அதைக் கண்காணித்து அவைகளை விரட்டியடிக்கவில்லை. குறித்த நாளில் நடைப்பெறப் போகும் தேர்தலை எதிர்பார்த்து நமது கழகத்தினர் ஆயத்தமாயிருந்தனர்; ஆனுல் தேர்தலுக்கு முதல் நாளிரவு காங்கிரசுக்காரர்கள் தேர்தலை நடத்திவிட்டார்கள். ஒவ்வொரு இடத்திலும் இரண்டு தேர்தல்கள் நடைபெற்றன. 8-ம் தேதி தேர்தலென்ருல், 8-ம் தேதி காலை 7 மணிக்குப் பொதுத் தேர்தல் நடைபெற ஆரம்பித்தது. அங்கு போட்டியிடும் நமது அபேட்சகரும், கழகத்தோழர்களும் 7ந்தேதி வரை ஊர்ஊராகச் சென்று கூட்டங்கள் போட்டு, மக்களைக் கூட்டி, கொள்கை விளக்கங்களைத் தந்து, ஆதரவு திரட்டி, "நல்ல வாய்ப்பு இருக்கிறது" என்ற எண்ணத்துடன் 7ந்தேதி இரவை நிம்மதியாகக் கழிக்கச் சென்றிருப்பார்கள், காலைவிடிந்ததும் தேர்தல் ஆரம்பிக்கும், தேர்தல் சாவடிக்கு தமது பிரதிநிதிகளையனுப்பும் வேலையில் ஈடுபட்டிருப்பார். ஆனுல் காங்கிரசுக்காரர்கள் 7ந்தேதி இரவு தான் தேர்தல் வேலையைத் துவங்கினுர்கள். இரவு பன்னிரண்டானதும் கார்கள் நாலா பக்கங்களுக்கும் விரிட்டுச் சென்றன. ஆட்டுச் சந்தையில் பேரம்பேசப்படுவதுபோல, "500 ஓட்டுக்கு 1000 ரூபாயா? 1200 ரூபாயா?" எனப் பணத்தேர்தல் நடைபெற்றது. 8ந்தேதி நடைபெறும் பொதுத்தேர்தலில் முன்னேற்றக் கழகத்துக்கு நல்ல ஆதரவு இருந்தபோதிலும் 7ந்தேதி இரவு நடைப்பெற்ற பணத்தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்று விடுகிறது. பல இடங்களில் காங்கிரஸ் அவ்வாறு முதல் நாளிரவு நடத்தும் பணத்தேர்தலின்மூலம் பொதுத்தேர்தலைநடத்தி வெற்றி கண்டுள்ளது. இருட்டு வேளையில், மக்கள் உரிமையைத் திருடிச்செல்லுபவர்களை வெளிப்படுத்தி, தேர்தல் "திருட்டுத்தனங்களை" தடுத்து நிறுத்திட நம்மால் முடியவில்லை முன்னதாக எதிர்பார்க்காத காரணத்தால்!

காங்கிரசு, காங்கிரசுக்கு எதிர்ப்பு என்ற அளவில் தேர்தல் பாகுபாடு முன்பு இருக்கும் இந்தத் தேர்தலில் பல இடங்களில் திராவிட முன்னேற்றக் கழகம், திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு எதிர்ப்பு என்ற பாகுபாடு உண்டாகி, தான் தோற்ருலும் பரவாயில்லை திராவிட முன்னேற்றக் கழகம் தோற்கடிக்கப் படவேண்டும் என்று மற்றவர்கள் ஒன்று கூடி பலத்த எதிர்ப்பைத் தந்தனர்.

முதல் தடவையாகத் தேர்தலில் ஈடுபடும் பொழுது, வேறு எந்தக் கட்சிக்கும் இல்லாத அளவுக்கு மிகப் பெரிய எதிர்ப்பு திராவிடமுன்னேற்றக் கழகத்தின்முன் வைக்கப்பட்டது. இவ்வளவு பலத்த எதிர்ப்புகளிடை, கட்டுப்பாடான எதிர்ப்புச் சக்திகளை மீறி 15 பேர் வெற்றியுடன் வெளிவந்தது பாராட்டுதலுக்குரியதாகும் ஒவ்வொரு இடத்திலும் இருந்த நிலைமையைக் கவனித்தவர்களுக்கு, "இவ்வளவு பேர்கள்தான் வந்தார்களா?" என்பதைவிட, "இவ்வளவு பேர்களாவது வந்தார்களே!" என்ற வியப்பும் ஆறுதலும் உண்டாகும்.

நாம் போட்டியிட்ட இடங்களில் 15 பேர்கள் தாம் வெற்றிபெற்றிருக்கிறார்கள் என்றபோதிலும் நாட்டுமக்கள் நமக்கு அளித்திருக்கும் ஆதரவு, அளவிலோ ஓட்டுஎண்ணிக்கையிலோ குறைந்ததல்ல, திராவிடமுன்னேற்றக் கழகத்தினருக்குச் சட்டசபையில் எவ்வளவு இடங்கள் கிடைத்திருக்கின்றன என்பதைவிட, மக்களிடத்தில் அவர்களுக்கு எவ்வளவு ஓட்டுகள் கிடைத்திருக்கின்றன எனக் கணக்கெடுத்துப் பார்த்தால், கழகத்திற்கு இந்த நாட்டு அரசியலில் உள்ள பலம் நன்ருகத் தெரியும்.

சென்னை மாநிலத்தின் தேர்தலில், காங்கிரசுக்கு அடுத்தபடியாகப் பெருவாரியான ஓட்டுகளைப் பெற்றுள்ள அரசியல் கட்சி திராவிட முன்னேற்றக் கழகமாகும். மாநில முழுமைக்கும் காங்கிரசுக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் கிடைத்துள்ள ஓட்டு எண்ணிக்கைகள் கீழே தரப்பட்டுள்ளன.

மொத்தம் பதிவான ஓட்டுகள்	...	1,14,28,710
காங்கிரசுக்கு விழுந்த ஓட்டுகள்	...	50,40,587
தி. மு. கவுக்கு ,,	...	16,56,745

அந்தந்த கட்சி அபேட்சகர்களுக்கு விழுந்த ஓட்டுக்களை மொத்தமாக எடுத்துப் பார்த்தாலும், காங்கிரசுக்கு 100க்கு 44-1 வீதம் ஓட்டுகள் விழுந்திருக்கின்றன; திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு 100க்கு 14-5 வீதம் விழுந்திருக்கின்றன. இந்த ஓட்டு வீதாச்சாரத்தை வைத்துப் பார்த்தால், இடங்களில் 100க்கு 43 காங்கிரசுக்கும் 15 தி. மு. கவுக்கும் வந்திருக்கவேண்டும். அதாவது "வீதாச்சாரப்படி பிரிதிநிதிகள்" என்ற தேர்தல் முறை இருந்திருக்குமேயானால், காங்கிரசுக்கு மொத்தத்தில் சட்டசபையில் 90 உறுப்பினர்களும், திராவிட முன்னேற்றக்கழகத்திற்கு 30 உறுப்பினர்களும் கிடைத்திருப்பார்கள். இப்பொழுதுள்ள முறைப்படி, அது இல்லை. நமக்குக் கிடைத்துள்ள ஓட்டுகளின் அளவைக் குறிப்பிடவே, இந்தக் கணக்கைத் தருகிறோம்.

காங்கிரசு 50 லட்சத்து, 40 ஆயிரம் ஓட்டுகள் வாங்கியிருக்கிறது என்பதைப் பார்க்கும்பொழுது, அந்த ஓட்டுகள் மாநிலம் பூராவும் இராமனுதபுரம் ஒன்றுதவிர மற்ற எல்லா இடங்களில் போட்டியிட்டதால் கிடைத்தவைகளாகும். திராவிட முன்னேற்றக் கழகம் எல்லாவிடங்களிலும் போட்டியிடவில்லை. அது போட்டியிட்ட இடங்களை மட்டும் வைத்துப் பார்த்தால், காங்கிரசுக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும்உள்ள விகிதாசாரம் நன்குதெரியும். மாவட்டந்தோறும், கழகம் போட்டியிட்ட தொகுதிகளில் இரண்டுக்கும், கிடைத்துள்ளஓட்டுவிவரங்கள் கீழே தரப்படுகின்றன.

வரிசை எண்.	மாவட்டத்தின் பெயர்.	கழகம் போட்டியிட்ட இடங்கள்.	பதிவான வாக்குகள்.	காங்கிரசுக்கு கிடைத்தது.	தி. மு. கழகத்துக்கு கிடைத்தது.
1	சென்னை	7	2,91,812	1,17,195	1,15,354
2	செங்கற்பட்டு	6	3,65,201	1,48,760	1,01,359
3	வட ஆற்காடு	13	7,04,959	2,90,307	2,32,536
4	தென்னுற்காடு	11	6,65,449	2,77,410	2,42,837
5	சேலம்	17	8,37,689	3,76,552	2,32,602

வரிசை எண்.	மாவட்டத்தின் பெயர்	கழகம் போட்டியிட்ட இடங்கள்.	பதிவான வாக்குகள்.	காங்கிரசுக்கு கிடைத்தது.	தி. மு. கழகத்துக்கு கிடைத்தது
6	திருச்சி	13	8,22,126	3,23,743	2,02,392
7	தஞ்சாவூர்	17	11,17,857	5,29,198	1,76,951
8	மதுரை	8	5,18,904	2,31.647	1,08,517
9	கோயம்பத்தூர்	13	8,40,158	3,79,818	1,17,413
10	இராமனுதபுரம்	6	4,00,267	1,46,335	52,105
11	திருநெல்வேலி	8	4,53,718	2,18,309	68,891
12	கன்னியாகுமரி	3	1,59,504	81,444	5,788

போட்டியிட்ட இடங்களில், விழுந்துள்ள ஓட்டுகளைப் பிரித்துப் பார்த்தால். கழகத்துக்கு நல்ல அளவுதான் விழுந்திருக்கிறது. மொத்தம் விழுந்துள்ள 70,77,644 ஓட்டுகளில் காங்கிரசுக்கு 31,20,718 கிடைத்துள்ளது, கழகத்திற்கு 16,56,745 கிடைத்துள்ளது. விகிதாசாரப்படிபார்த்தால், மொத்தத்தில் 100க்கு 44 ஓட்டுகள் காங்கிரசுக்கும் 23 ஓட்டுகள் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் கிடைத்துள்ளது. ஆனால் காங்கிரசுக்கு கிடைத்துள்ள இடங்கள். ஓட்டுகள் விகிதத்தைவிட அதிகமானவை. மாவட்டங்களைத் தனித் தனியாகப் பார்த்தால், சென்னை, வட ஆற்காடு, தென்னுற்காடு சேலம், செங்கற்பட்டு திருச்சி ஆகிய மாவட்டங்களில் காங்கிரசுக்கும் கழகத்துக்கும் நல்ல போட்டியிருந்தும், மொத்த ஓட்டு எண்ணிக்கைகளில் உள்ள விகிதத்தைவிட மிகக் குறைந்த இடங்கள் தாம் கிடைத்துள்ளன.

வரிசை எண்.	மாவட்டத்தின் பெயர்	ஓட்டுகள் 100க்கு		வெற்றிபெறறவை	
		காங்.	தி. மு. க.	காங்.	தி. மு. க.
1	சென்னை	40	39·5	4	3
2	வட ஆற்காடு	41	33	8	4
3	தென்னுற்காடு	42	37	7	4
4	சேலம்	45	29·	15	2
5	செங்கற்பட்டு	41	28·	11	1
6	திருச்சி	39	25	11	1

சென்னையில் போட்டியிட்ட 7 இடங்களில் காங்கிரசுக்கும் கழகத்துக்கும் மிகக்குறைந்த அளவுதான் வித்தியாசமிருக்கிறது. நூறு ஓட்டுகள் விழுந்தால், காங்கிரசுக்குக் கழகத்தை விட ஒன்றுக்கும் குறைவான ஓட்டுதான் கிடைத்திருக்கிறது. ஏறத்தாழ சமமான போட்டி. அப்படியிருந்தும் நாம் போட்டியிட்ட 7 இடங்களில் காங்கிரசுக்கு 4 இடங்களும், நமக்கு 3 இடங்களும் கிடைத்துள்ளன. மிகக் குறைவான ஓட்டுகள் அதிகம் பெற்று காங்கிரசு அதிக இடங்களைப் பிடித்துவிட்டது. மற்ற மாவட்டங்களில் இந்த வேறுபாடு இன்னும் அதிகமாக இருக்கிறது. தென்னுற்காடு மாவட்டத்தில் நாம் போட்டியிட்ட 11 இடங்களில்

நம்மைவிட 1/6 (ஆறில் ஒருபங்கு) ஓட்டுகள் தான் காங்கிரசுக்கு அதிகம், ஆனால் கிடைத்துள்ள இடங்களைப் பார்த்தால் காங்கிரசுக்கு 7, கழகத்துக்கு 4! சேலம் மாவட்டத்தில் நம்மைப்போல ஒன்னரை மடங்கு ஓட்டுகள் காங்கிரசுக்குக் கிடைத்தது. ஆனால் இடங்கள் மட்டும் நமக்குக் கிடைத்ததைவிட ஏழரை மடங்கு அதிகமானது!

காங்கிரசு பல இடங்களில் பாதிக்கும் குறைவான ஓட்டுகளைப் பெற்றும் அதிகமான இடங்களைப் பிடித்துள்ளது. அதற்குக் காரணம் மற்ற ஓட்டுகள் சிதறிவிட்டன, குறைந்தஅளவு பெற்றுக்கூட காங்கிரசால் வெற்றிபெற முடிந்தது. நமது கழகத்தில் முக்கியமானவர்கள் வெற்றியடைந்த பொழுது, பதினைந்தாயிரம், பதினாறாயிரம், பத்தாயிரம் எட்டாயிரம் என்று அதிக ஓட்டுகளைக் குவித்துக் காட்டினார்கள். ஆனால் நாம் தோற்றுப் போன பல இடங்களில் சில நூறு ஓட்டுகள் வித்தியாசத்தில் தோற்றிருக்கிறோம் இன்னும். சற்று அதிகமான கண்காணிப்புடன் கவனம் செலுத்தியிருந்தால் அதிகப்படியான இடங்களைப் பிடித்திருக்க முடியும்.

காங்கிரசு முன்னேற்பாட்டுடன், தனது அதிகாரபலம், பணபலம், பக்கபலம், எல்லாவற்றையும் பணயம் வைத்து முழுமூச்சுடன் எல்லா இடங்களிலும் போட்டியிட்டது. நாம் வெற்றி பெற்ற இடங்களில் அதன் போட்டி மற்ற இடங்களிலிருந்ததைவிடப் பலமடங்கு அதிகமாகத்தான் இருந்தது. அதை மீறித்தான் 15 பேர்கள் வெற்றி கண்டனர். காங்கிரசு தனது சார்பில் அபேட்சகர்களைப் போட்டது மல்லாமல், ஓட்டுகளைப் பிரிக்கும் நோக்கத்துடன் வேறு பல சுயேச்சைகளையும் நிறுத்திவைத்திருந்தது. நமது கழகம் வெற்றிகண்ட 15 தொகுதிகளில், ஆயிரம் விளக்குத் தொகுதி ஒன்று தவிர மற்ற இடங்களில் நேரடியாகக் காங்கிரசை எதிர்த்துப் போட்டியிடும் வாய்ப்பு கிடைக்கவில்லை. **திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வெற்றிபெற்ற 15 பேர்களும், மொத்தத்தில் 15 காங்கிரசுக்காரர்கள் 24 சுயேட்சைகள் 6 கம்யூனிஸ்டுகள் 3 மற்றகட்சியினர் ஆகியவர்களை தோற்கடித்து வெற்றிவாகை சூடியுள்ளனர்!**

வெற்றி பெற்ற இடங்கள் குறைவாக இருந்தபோதிலும், அந்த இடங்களில் இருந்ததைப் போன்ற ஒழுங்கான, கட்டுப்பாடான, உழைப்பை மற்ற இடங்களிலும் நல்கியிருந்தால், இன்னும் சற்று அதிகமான கண்காணிப்புடன், முன்னெச்சரிக்கையுடன் பணியாற்றியிருந்தால், இதைப்போன்று இன்னும் பத்து பதினைந்து இடங்களை நிச்சயமாக நாம் அடைந்திருக்கக் கூடும். அதற்கான வாய்ப்பு இருந்தது. **நாம் வெற்றிபெற்ற இடங்கள் 15 தான்! ஆனால் இரண்டாவதாக வந்து தோற்றுப்போன இடங்கள் 47!** பலமான எதிர்ப்புகளை மீறி மிகக் குறைந்த அளவு வசதிகளுடன் போராடிப் போராடி, தட்டுத்தடுமாறி இழுத்துப் நகர்ந்து கடைசியாக வெற்றிக் கோட்டுக்குச் சற்று முன்னதாக விழுந்துவிட்ட இடங்கள் அவை! மொத்தம் போட்டியிட்ட 122 இடங்களில் 15 இடங்களில் வெற்றிபெற்றோம். 47 இடங்கள் இரண்டாவது இடத்தை அடைந்து தோற்று விட்டோம்! ஆக 62 இடங்களில், மொத்தம் போட்டியிட்டதில் பாதிப் பகுதியில், வெற்றிக்கான வாய்ப்பு, காங்கிரசுக்குப் பலமான எதிர்ப்பு தரப்பட்டுள்ளது!

மக்கள் சபைத் தேர்தலில் கூட, திராவிட முன்னேற்றக் கழகம் குறிப்பிடத்தகுந்த அளவு ஓட்டுகளைப்பெற்றிருக்கிறது. கழகச் சார்பில் போட்டியிட்ட 13 இடங்களில் பதிவான வாக்குகளும், கிடைத்துள்ள வாக்குகளும், கீழேதரப்படுகின்றன.

பதிவான வாக்குகள்	 36,25,996
காங்கிரசுக்குக் கிடைத்தவை	 15,89,605
தி. மு. க.வுக்குக் கிடைத்தவை	 9,92,566

இந்த வாக்குகளைக் கொண்டு, நமக்குக் கிடைத்த இடங்கள் 2, காங்கிரசுக்குக் கிடைத்த இடங்கள் 10!

மக்கள் சபைத் தேர்தலில் நமது ஆதரவாளர்களாக இருவர் செங்கற்பட்டுத்தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

எல்லாவற்றையும் விட மிகமுக்கியமானது இந்தத் தேர்தலின் மூலம் நமது கழகக்கொள்கைகள் பரவியதுதான். ஐந்து ஆண்டுகளில் செய்யக்கூடிய பெருத்தவேலை, இரண்டு மாதங்களில் நாடுமுழுவதும் செய்யப்பட்டிருக்கிறது. தேர்தலில் நேரடியாக நின்றதன் மூலமாக, ஏறத்தாழ 80 லட்சம் வாக்காளர்கள் முன் நேரடியாக நமது கழகத்தின் நோக்கங்கள் நாள்தோறும் எடுத்து விளக்கப்பட்டிருக்கிறது. மக்கள் தொகையில் முக்கால் பங்கினர் நம்மால் நேரடியாக பார்க்கப்பட்டிருக்டுகின்றனர், கழகத்தின் நோக்கங்கள் பரப்பப்பட்டிருக்கின்றன.

கழகத்தின் பெயர் பரவாத இடமில்லை, கழகத்தின் கொடி பறக்காத பட்டி தொட்டி கிடையாது என்று கூறலாம். சட்ட சபையில் நாம்

பிடித்த இடங்கள் சிலதான்; ஆனால் தேர்தலின்போது நாம் "பிடித்த"-நமது கொள்கைகள் "பிடித்துக்கொண்ட" சிற்றூர்கள் ஏராளம்! எண்ணிறந்த கிளைக்கழகங்கள், எண்ணற்ற இளைஞர்கள் ஆங்காங்கு பணிபுரிய ஆரம்பித்து விட்டனர்! மிகக் குறுகிய காலத்தில், மிகக் குறைந்த செலவில் மகத்தான சாதனைகளை நாம் செய்திருக்கிறோம்!

இந்தத் தேர்தலில் நமது கழகம் ஆற்றியுள்ள பணி, முதல்தடவையாக நிலத்தைப் பயிர்த்தொழிலுக்கு பண்படுத்துவதுபோல! பழைய மண்கிளறி விடப்பட்டு விட்டது, கழகக் கொள்கைகள் தூவப்பட்டிருக்கின்றன. அது எதிர்காலத்தில், அடுத்துவருகிற ஐந்து ஆண்டுகளில், அதற்குப்பின் வரும் தேர்தலில் நிச்சயமாக நல்ல பலனைத் தரும்! மண் வளமும் நன்றாகயிருக்கிறது. நாம் தூவுகிற கருத்துக்களும் செழுமையான முற்றிய மணிகள்; வளமான பயிர் வளராமலா போகும்!

பணபலத்தைக்கொண்டு காங்கிரசு வெற்றி கண்டுவிட்டதேனும், எதிர்காலத்தில் அதே விதத்தில் பணபலம் ஒன்றை மட்டும் வைத்துக்கொண்டு வெற்றிகாண முடியாது. நமது கழகத்தோழர் ஆயிரம் இரண்டாயிரம் ரூபாய் செலவு செய்தால், எதிர்தரப்பில் காங்கிரசுக்காக ஐம்பதினாயிரம், ஒருலட்சம் செலவுசெய்த பின்தான் அவர்களால் வெற்றிகாண முடிந்தது. நமது தோழர் இரண்டாயிரமோ நாலாயிரமோ செலவிட்டால், அவர்களுக்கு ஒரு லட்சத்திலிருந்து இரண்டு லட்சம்வரை செலவுத்தொகை உயர்ந்து போயிருக்கும். இவ்வளவு செலவு செய்துதான் வெற்றிபெற முடியுமென்று முன்கூட்டியே தெரிந்திருந்தால் பலர் நின்றிருக்க மாட்டார்கள். மிக அலட்சியத்துடன் தேர்தலில் இறங்கிய காங்கிரசு கனதனவான்கள், முதலில் செலவு சிறிது வளர்ந்து, பின் போட்ட எல்லையையும் தாண்டி அதற்குப்பின் ஏராளமாகச்செலவிட்டால்தான் வெற்றிக்குவழி என்ற நிலையில், வேறுவகையின்றி செலவிட்டு, தேர்தலுக்குப்பின் "முப்பதாயிர" ஓட்டுகள் என்று கிடைத்த ஓட்டு எண்ணிக்கையைவிட, "எண்பதாயிரம் செலவாயிற்றே!" என்று செலவிட்ட பணத்தின் எண்ணிக்கைதான் காங்கிரசுக்காரரின் எண்ணத்தில் உறுத்திக்கொண்டிருக்கிறது. அந்தக் காரணத்தினால்தான், வெற்றி பெற்றும் பலருக்கு களையில்லை. ஆனால் பல இடங்களில் நமது தோழர்கள் தோல்வியடைய நேரிட்ட போதிலும், அடுத்தத் தேர்தலுக்கு ஆயத்தமாகும் முயற்சியுடையவர்களாக உற்சாகத்துடன்-சில இடங்களில் குதூகலத்துடன் இருப்பதைப் பார்க்கிறோம். காரணம், அதிகமாக எதையும் அவர்கள் இந்தத் தேர்தலில் இழந்துவிடவில்லை; அவர்களிடம் அதிகமாக இல்லை இழந்துவிடுவதற்கும்! இந்தத் தேர்தலில் நமது தோழர்களுக்கான செலவையும் எதிர்தரப்பினருக்கான செலவையும் கணக்கிட்டால், யாராவது பார்த்தால், அடுத்த தேர்தலில் ஒருலட்சம் இரண்டு லட்சம் என்று இழக்கத் தயாராயிருப்பவர்கள் வேண்டுமானால் போட்டியிட முன்வருவார்களேயன்றி, கழகத்தை அலட்சியப்படுத்தி நின்றுவிட முடியாது.

முதல் தடவையாகத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் அடைந்துள்ள முதல் வெற்றிகள் குறித்து பெருமைப்படுகிறது மகிழ்ச்சியடைகிறது! அந்த முதல்வெற்றிகள் முதல்தடவையாக வந்த வெற்றிகள் மட்டுமல்ல, முதல்தரமான வெற்றிகள் கூட! வெற்றி பெற்ற கழகத்தோழர்களைப் பாராட்டுகிறோம்! வெற்றிக்கு வழிவகுத்த உழைப்பாளர்களை, உதவி செய்த நண்பர்களை, வாக்குகளைத் தந்து வெற்றியைத் தந்த வாக்காளர்களுக்கு நமது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்! வெற்றியடைந்த இடங்களிலன்றி, தோல்வியடைந்த இடங்களிலும் கழகத் தோழர்களும் ஆதரவாளர்களும் தங்களது கடமையை ஆற்றியிருக்கிறார்கள்; வெற்றி தோல்வி பின்பு தெரிந்தபோதிலும் தேர்தல் நாட்களில் குறைந்த வசதிகளுடன் பலமான எதிர்ப்பைத் தாங்கி, அவர்கள் பணியாற்றியிருக்கின்றனர்! நாமெல்லோரும் எதிர்பார்த்ததைவிட அதிகமான அளவு தேர்தல் காலத்தில் கழகம் வளர்ச்சியுற்றிருக்கிறது, கழகத்தின் கொள்கைகள் பரவியுள்ளன! அந்த அளவில், தோல்வியாயினும் வெற்றியாயினும் பொதுவாகப் பார்க்குமிடத்து தேர்தலுக்கு முன்பிருந்ததைவிட தேர்தலுக்குப்பின் கழகம் உயர்ந்துள்ளது! பல இடங்களில் தோல்விகள் வெற்றியாகியுள்ளன; வெற்றிகளாகும் தோல்வி இனி வரப்போகும் வெற்றிக்கு அடிப்படை-முதலீடு-முதல் ஆகும். அந்தவகையில் முதல்தரமான முதல் வெற்றிகளும், முதல்தரவெற்றிகளைத் தரவல்ல "முதல்" வெற்றிகளும் கழகத்திற்குக் கிடைத்துள்ளன. கிடைத்துள்ள வெற்றிகளைப் பலப்படுத்தி இனி கிடைக்கவேண்டிய வெற்றிகளுக்கு வழி வகுத்து காரியமாற்றுவோமாக! பாடுபடுவோம்; பலன் கிடைக்காமற்போகாது!

மறைந்த குமாரசாமிராசா

மார்ச் 16 ந்தேதி யன்று திரு குமாரசாமி இராசா அவர்கள் மறைந்தார் என்பது கேட்டு தமிழகம் பெரிதும் வருந்தியது. தேர்தல் முடிவுகளை எதிர்பார்த்து, கூட்டங் கூட்டமாக வானொலிப் பெட்டிகள் அருகே மக்கள் காத்திருக்கும்பொழுது, "திரு குமாரசாமி இராசா அவர்கள் இறந்தார்" என்ற சோகச் செய்தி ஒலிபரப்பப்பட்டது. தேர்தல் காலமாயிருந்த போதிலும், கட்சிவேறுபாடுகள் பல இருந்த போதிலும், அவருடைய மறைவு தென்னகத்திலிருக்கும் எல்லோருடைய உள்ளத்திலும் ஒரு சோகத்தைக் கிளப்பியது. நாட்டு நலத்தில் அக்கரை காட்டியவர் என்ற அளவில் ஒரு நல்லவரை நமது நாடு இழந்துவிட்டது.

திரு. குமாரசாமி இராசா அவர்கள் நீண்ட காலமாய்ப்பொதுப்பணியில் ஈடுபட்டிருந்தவர். இளமையிலிருந்தே காங்கிரசில் சேர்ந்து பணியாற்றி, சட்டசபையில் காங்கிரசு புகுந்த பொழுது சட்டசபை அங்கத்தினராகி, பின் சென்னை மாகில முதன் மந்திரியாகவும், அப்புறம் ஒரிசா மாநிலக் கவர்னராகவும் அவர் பணியாற்றினார். ஒரிசா மாநிலத்தில் அவர் இருந்தபொழுதே உடல்நிலை தளர்ந்திருந்தது. கவர்னர் பதவியைவிட்டு உடல் நிலை காரணமாக ஓய்வு எடுக்கவேண்டியிருந்தது. ஓய்வெடுத்ததும், உடல் நிலை சீரடைந்ததும், அவரது பணி நாட்டுக்கு - தென்னாட்டுக்குக் கிடைக்கும் என நம்பியிருந்தோம்! நாட்டு மக்களும் அதை எதிர்பார்த்திருந்தனர். திரு குமாரசாமி இராசா அவர்களே அவ்வாறு எதிர்பார்த்துதான் ஒரிசா மாநிலத்தை விட்டு வரும்பொழுது இருந்தார்.

ஒரிசா மாநிலக் கவர்னர் பதவியை விட்டு வருவதற்குமுன்பு 28-8-56ல் கோயம்புத்தூரில் உயர்நிலைப் பள்ளிக்கட்டிடத்தை திறந்துவைக்கும்பொழுது **நான் கவர்னர் பதவியினின்றும் விலகியதற்குப் பிறகு அதுபற்றி நிரம்பச் செய்திகள் வெளியிடுகிறேன்**" என்று நாட்டு மக்களுக்குச் சொல்லி வைத்தார். அவர் "அதுபற்றி" என்று குறிப்பிட்டது மத்திய அரசாங்கத்தின் ஆதிக்கம் பற்றியதாகும். கவர்னர் பதவியில் இருக்கிற காரணத்தால் பல உண்மைகளைக் கூற முடியவில்லை. என்வே கவர்னர் பதவியை விட்டு வந்ததும் சொல்கிறேன் என்று அவர் சொன்னார். என்னென்ன சொல்லப் போகிறார் என்பதற்கு அறிமுகமாக, அந்தப் பள்ளிக்கூடத் திறப்புவிழாவிலேயே ஓரிரண்டு கருத்துக்கள் அவரால் தரப்பட்டன.

"இந்தியப் பேரரசு மாநிலங்களின் கல்வித்துறை பற்றிய நடவடிக்கைகளில் அளவுக்கு மீறித் தலையிட்டு ஆதிக்கம் செலுத்துகிறது. மாநிலங்களுக்கு உதவிநிதி தரும்பொழுது மத்திய அரசாங்கம் அநீதியான நிபந்தனைகளை விதிப்பது கூடாது.

வடநாட்டில், இந்தியாவின் பெருமைக்குரியதாகக் கருதப்படும் தாமோதரப் பள்ளத்தாக்குத் திட்டத்திற்குப் பொதுமக்களின் பணம் பெருத்த அளவில் வீணாக விரயமாக்கப்படுகிறது.

வடநாட்டில் சார்வோதயா பற்றி அதிகமாகப் பேசுவார்கள், ஆனால் அணைத்திட்டங்களை நிறைவேற்ற அமெரிக்க இயந்திரங்களையும் வெளிநாட்டு சிமிட்டையும் இறக்குமதி செய்துகொள்வார்கள்.

தென்னாட்டில் குறைந்த செலவில் அணைக்கட்டுகள் கட்டப்படுகின்றன, ஆனால் வடநாட்டில் அதேவித வேலைகள் அதிகமான செலவில் பணம் வீணாக்கப்பட்டு முடிக்கப்படுகின்றன.

அதிகாரிகளின் அலுவல்களில் இந்திய மந்திரிகள் அவசியமற்ற முறையில் தலையிடுகிறார்கள். அதிகாரிகளால் செய்யப்படும் வேலைகள் நூற்றுக்கு நூறு சரியாக இருந்தபோதிலும், மத்திய அரசாங்க மந்திரிகள் வேண்டுமென்றே அங்கொன்றும் இங்கொன்றுமாகத் திருத்தம் சொல்லி, வேலைகளைக் குலைத்துவிடுகிறார்கள்.

அதுபோலவே மாநில அரசுகளின் நடவடிக்கைகளில் இந்தியப் பேரரசு அளவுக்கு மீறித் தலையிடுகிறது.

மத்தியஆட்சியின் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நாம் போர் தொடுக்கவேண்டிய காலம் ஒன்று வந்தாலும் வரக்கூடும் என்று நான் அச்சப்படுகிறேன்."

இவ்வளவு குற்றச்சாட்டுகளையும், மத்திய அரசாங்கத்தின் குறைபாடுகளையும் பொதுப்படையாகச் சொல்லிவிட்டு, வடநாடு—தென்னாடு, மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கம் இவைகள் பற்றி ஏராளமாகப் பேசவேண்டுமென்று உள்ளத்தில் குமுறல் இருந்தபோதிலும், கவர்னர் பதவியிலிருந்த காரணத்தினால் ஒவ்வொன்றையும் விளக்கமாகச் சொல்ல முடி

யாமல், "மத்திய அரசாங்க ஆதிக்கம்பற்றி இன்னும் எவ்வளவோ சொல்லவேண்டியிருக்கிறது. கவர்னர் பதவியினின்றும் விலகியதற்குப்பிறகு அதுபற்றிய அதிகமான செய்திகள் தருவேன்" என்று சொன்னார்.

ஒரிசா கவர்னர் பதவியை விட்டு அவர் தென்னாட்டுக்குத் திரும்பியதும், உடல் நிலை சீரடைந்ததும், அவர் தரும் தகவல்களை நாடு எதிர்பார்த்திருந்தது. மிகப் பொறுப்பான பதவியிலிருந்தவருக்கு நம்மை விட அதிகமான அளவு வடநாட்டு ஆதிக்கத்தின் வஞ்சத்தையும், கொடுமையையும், ஊதாரித்தனத்தையும் அறிய வாய்ப்புகள் இருந்திருக்கும். மேலும் பதவியில் ஒட்டிக்கொண்டிருக்க விருப்பமின்றி, தெரிந்துகொண்ட உண்மைகளை நாட்டுக்கு அறிவிக்க அவர் தயாரானார், மத்திய ஆட்சியால் மாநில அரசுகளுக்கும் ஏற்பட்டுள்ள அபாயங்களை அறிவித்தார். முழுவிபரங்களைத் தந்து தென்னாட்டு மக்களின் கவனத்தைத் திருப்புவதற்கு முன் அவர் மறைந்தார். ஆனாலும் தனது உள்ள குமுறலை தென்னாட்டிடம் தனக்கு அக்கரையை, வடநாட்டு அரசாங்கத்தின் ஆதிக்கத்தை பதவியிலிருக்கும் பொழுதே ஓரளவு அவர் வெளியிட்டுச் சென்றார், மறைந்தார், மறையுமுன்னதாக தென்னாட்டு மக்களுக்கு அவர் தந்த செய்திகள் மிக முக்கியமானவை. அவற்றை மேற்கொண்டு, தென்னாட்டின் எதிர்காலத்தையும் மாநில அரசின் உரிமைகளையும் பாதுகாப்பது நமது கடமையாகும்.

அவரைப் பிரிந்து துயரத்தில் வாடும் குடும்பத்தினருக்கு நமது ஆறுதலைச் செலுத்துகிறோம்.

★

அறிக்கை

"மன்றம்"

1.	வெளியாகும் இடம்	:	26, நைனியப்பன் தெரு, சென்னை-1.
2.	வெளியிடும் நாட்கள்	:	மாதம் இருமுறை.
3.	அச்சிடுவோர் பெயர்	:	இரா. நெடுஞ்செழியன்.
	இனம்	:	திராவிடர்.
	முகவரி	:	26, நைனியப்பன் தெரு, சென்னை-1.
4.	வெளியிடுவோர் பெயர்	:	இரா. நெடுஞ்செழியன்.
	இனம்	:	திராவிடர்.
	முகவரி	:	26, நைனியப்பன் தெரு, சென்னை-1.
5.	ஆசிரியர் பெயர்	:	இரா. நெடுஞ்செழியன்.
	இனம்	:	திராவிடர்.
	முகவரி	:	26, நைனியப்பன் தெரு, சென்னை-1.
6.	பத்திரிகையின் உரிமையாளர்களுடைய பெயர்களும் முகவரியும் அல்லது பத்திரிகையில் ஒரு சத வீதத்திற்கு அதிகமான மூலதனம் போட்டுள்ளவர்களின் பெயர்களும் முகவரியும்.		இரா. நெடுஞ்செழியன், 26, நைனியப்பன் தெரு, சென்னை-1.

என் அறிவிற்கும், நம்பிக்கைக்கும் நன்கு தெரிந்தமட்டில் மேலே கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை என இரா. நெடுஞ்செழியனாகிய நான் இதன் மூலம் அறிவிக்கிறேன்.

சென்னை
27—3—57

(ஒப்பம்) இரா. நெடுஞ்செழியன்,
வெளியிடுவோர்.

(1-2-57 இதழின் தொடர்ச்சி)

வானம்பாடி

(செல்வன்)

மறுநாள் ஹாக்கிற்கு ஒரு கடிதம் எழுதினான் ஷெல்லி. அக்கடிதத்தில் முதற்காதலின் முடிவை எண்ணித் தான் அடைந்த துன்பத்தைப்பற்றி விவரித்திருந்தான். இத்தோல்விப் போராட்டத்தில் தான் உயிரை இழந்திருந்தால் கவலைக்கடலில் மூழ்கிக் கண்ணீர் சொரியும் நிலை ஏற்பட்டிருக்காது. தற்கொலை செய்துகொள்வது தவறு என்ற எண்ணம் அடிக்கடி எழும்பி என்னை அலைக்கழித்தது. என் துன்பத்தைத் துடைத்து துயரக்கடலின்றும் என்னை மீட்டும் ஒரே வழி 'தற்கொலை' தான் என்ற முடிவுடன் இரவில் படுக்கச் செல்லும் பொழுது உயிரைப்போக்கும் சக்தியையுடைய கொடும் நஞ்சும், கைத்துப்பாக்கியையும் எடுத்துச்சென்றேன். நள்ளிரவில் உன் நினைவும் என் தங்கையின் நினைவும் மட்டும் இல்லாதிருந்தால் இந்நேரம் நான் இறந்து பலமணி நேரங்களாயிருக்கும். என்று எழுதினான்.

இந்தச் சூழ்நிலையில் விடுமுறை முடிவதற்கு இன்னும் பதினைந்து நாட்கள் இருந்தன. தன் காதலின் அவல முடிவும், தாய் தந்தையரின் வெறுப்பும் சேர்ந்து ஷெல்லியை சித்தம் தடுமாறச் செய்தன. இந்நிலையில் தான் தன்னிடம் அன்புகாட்டும் அருமைத்தங்கை எலிசபெத் தன் நண்பன் ஹாக்கை மணந்துகொண்டால் அவள் வாழ்வு இன்பமாய் இருக்கும் என நினைத்து எலிசபெத் எழுதிய ஒரு பாடலை ஹாக்கிற்கு அனுப்பிவைத்தான். ஹாக் எழுதிய மற்றொரு பாடலை எலிசபெத்திடம் காண்பித்தான். இவர்களிருவரிடையே நட்பு வளர்ந்து காதலாக மாறுவதற்கு இருவரும் சந்திக்க ஏற்பாடுசெய்யும் எண்ணத்துடன் ஹாக்கை அந்த விடுமுறைக்கு அழைக்க நினைத்தான். ஷெல்லியின் தந்தை ஹாக்கின் வருகையை விரும்பாததால் முயற்சி நின்றுவிட்டது.

விடுமுறைக்குப் பிறகு கல்லூரிக்கு வந்து சில நாட்களுக்குப் பின் ஒரு நாள் கையில் கட்டுப் புத்தகங்களுடன் ஆக்ஸ் போர்டு புத்தக வியாபாரிகளான முண்டே சிலேட்டரிடம் ஷெல்லி சென்றான். பிரதி ஒன்றுக்கு ஆறு பென்ஸ் வீதம் விற்கவேண்டும் என்றுகூறி தன் கையில் கொண்டுவந்திருந்த புத்தகங்களை கண்ணாடி அலமாரிகளில் எல்லோர் கண்களிலும் படும்படி பல இடங்களில் பரவி வைத்தான். புத்தகத்தின் பெயர் என்ன என்று கூட பார்க்காமல் அது விற்றால் வரும் லாபம் இவ்வளவு என்று கணக்குப் போடுவதில் ஈடுபட்டிருந்தனர் புத்தக வியாபாரிகள். ஷெல்லி புத்தகங்களை அடுக்கிவிட்டுச்சென்ற இருபது நிமிடங்களுக்குப் பிறகு ஆக்ஸ்போர்டு கல்லூரி ஆசிரியருள் ஒருவரான ரெவரண்ட் ஜான் வாக்கர் புத்தக நிலையத்தைக் கடந்து செல்லும் பொழுது தற்செயலாக அலமாரியில் அழகாக, கவனத்தைக்கவரும் வகையில் வைக்கப்பட்டிருந்த புத்தகத்தைப் பார்த்தார்.

'நாத்திகத்தின் தேவை'

ஜான் வாக்கர் கோபத்தால் கொதிப்படைந்து கடைக்குள் விரைந்தார். "முண்டே! சிலேட்டர்! இதன் பொருள் என்ன?" என்று இரைந்தார்.

"இதைப்பற்றி எங்களுக்கு ஒன்றும் தெரியாது. ஆம்! உண்மையாகவே ஒன்றும் தெரியாது. நாங்கள் இந்தப் புத்தகத்தைப் படித்துப் பார்க்கவில்லை."

"நாத்திகத்தின் தேவை! இதைப் படிக்கவும் வேண்டுமா? இந்தப் பெயரே போதாதா உங்களுக்குப் பொருள் என்ன என்று புரியவில்லையா?"

"உண்மைதான்! பெயரே போதும் பொருளை விளக்க இப்பொழுது தான் எங்களுக்குத் தெரியவந்தது......!"

"தெரிந்த உடனேயே அலமாரியில் வைக்கப்பட்டிருக்கும் அத்தனை புத்தகங்களையும்

இப்பொழுதே எடுத்து தீக்கிரையாக்கிவிடுங்கள்"

ஜான்வாக்கர் அந்தக்கடைக்குக் கூட்டாளி அல்ல. அடிக்கடி அங்கு புத்தகம் வாங்குபவர் கூட அல்ல. இருந்தாலும் கட்டளை பிறப்பித்தார் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த புத்தகங்களைத் தீக்கிரையாக்கும்படி. ஏன் என்று கேட்கவில்லை புத்தக விற்பனையாளர்கள். மாறாக கட்டளையைச் சிரமேற்கொண்டு செய்து முடித்தனர். ஷெல்லிக்கு ஆளனுப்பி அழைத்துவரச் செய்து வாக்கரின் கட்டளையை மீற முடியாததால் புத்தகங்கள் தீக்கிரையாக்கப் பட்டதையும் தெரிவித்து ஷெல்லியின் எதிர்கால நலனை நினைத்து இம்மாதிரி 'பாவ' காரியங்களில் தலையிட வேண்டாம் என உபதேசம் செய்தார்கள். ஷெல்லி ஜெரமையா ஸ்டக்லி என்ற புனைபெயரில் தான் எழுதிய 'நாத்திகத்தின் தேவை' என்ற புத்தகத்தை ஆக்ஸ்போர்டு கல்லூரிப் பேராசிரியர்களுக்கும் பல்கலைக் கழகத் துணைவேந்தருக்கும் பாதிரிகளுக்கும் 'ஆசிரியரின் அன்பளிப்பாக' அனுப்பி விட்டதாகச் சொன்னான்.

இரண்டுதினங்களுக்குப் பிறகு ஹாக்கின் அறையில் ஷெல்லி உட்கார்ந்து படித்துக் கொண்டிருந்தான் பல்கலைக்கழகத் தலைவரிடமிருந்து ஷெல்லியை அழைத்துச் செல்ல வந்தான் ஒருவன். கீழ பெரிய பொது அறை ஒன்றில் ஐந்தாறு பேராசிரியர்களுடன் கையில் ஒரு புத்தம் புது புத்தகத்துடன் வீற்றிருந்தார் தலைவர். கண்கள கோபத்தில் சிவப்பேறியிருந்தன. உதடுகள் துடித்தன. கையிலிருந்த புத்தம்புது புத்தகம் கசக்கப்பட்டிருந்தது. அவர் கோபத்தின் உச்சநிலையைத் தெளிவாக எடுத்துக் காட்டியது. கூட இருந்தோரும் கோபமும் வருத்தமும் சூழ திகைத்திருந்தனர்.

கையில் கசக்கப்பட்டிருந்த புத்தகத்தை விரித்துக்காட்டி, "இதன் ஆசிரியர் நீ தானே" என்றார் கல்லூரித்தலைவர்.

ஷெல்லி அமைதியாக இருந்தான்.

"உன்னைத்தான். இப்புத்தகத்தை நீ எழுதினாயா? இல்லையா?"

"இதை எழுதியது நான் என்றால் அதற்குத்தகுந்த சான்றுகள் எங்கே? எக்காரணமும் இல்லாமல் "நீ தானே எழுதினாய் 'நாத்திகத்தின் தேவை' என்ற புத்தகத்தை" என்று கேட்பது நீதியுமாகாது, நேர்மைக்கும் அப்பாற்பட்டது"

"எதிர்த்துப் பேசாதே! இப்புத்தகத்தை எழுதியது நானல்ல என்று மறுக்கிறாயா?"

"இக்கேள்விக்குப் பதிலளிக்க நான் மறுக்கிறேன்."

"கல்லூரியிலிருந்து நீ விலக்கப்பட்டுவிட்டாய். நாளைக்காலைக்குள் கல்லூரி எல்லையிலிருந்தும் நீ வெளியேற வேண்டும்."

விலக்கப்பட்ட செய்தியைத் தெரிவிக்கும் ஒரு கடிதத்தை கல்லூரி முத்திரையுடன் ஷெல்லியின் கையில் கொடுத்தார் குழுமியிருந்த பேராசிரியர்களுள் ஒருவர். ஹாக்கின் அறைக்கு வேகமாக வந்த ஷெல்லி "விலக்கிவிட்டார்கள்! ஆம்! என்னைத் துரத்திவிட்டார்கள்." என்று உரக்கக் கத்தினான். மிகவும் பயங்கரமான தண்டனை, செழித்து வளரும் பயிரை வெட்டி வளர்ச்சியைத் தடுப்பது போல் அறிவு பெருக்கும் ஆற்றல்கொண்டு கல்வி கற்கும் ஷெல்லியின் கல்லூரிப் படிப்புக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. வேறு எந்தக் கல்லூரியிலுமே சேர்ந்து படிக்க முடியாத நிலையை ஏற்படுத்திவிட்டனர் கல்லூரி அதிகாரிகள். நிலவியிருந்த அமைதி அகற்றப்பட்டு அல்லற் கடலில் தள்ளப்பட்டபின் ஷெல்லி, தணிக்கமுடியாத தந்தையின் கோபத்தையும் சாபத்தையும் வேறு ஏற்க வேண்டியிருந்தது.

விலக்கப்பட்ட செய்தியறிந்த ஹாக் உணர்ச்சி தூண்ட கையில் காகிதம் எடுத்தான் ஷெல்லி மிகவும் நல்லவன். அறிவுத் திறம் அதிகம் கொண்டவன். அவனுக்கு இழைக்கப்பட்ட தண்டனை மிகவும் கொடியது. மறு விசாரணை செய்து தண்டனையைக் குறைக்க வேண்டும் என்று கூறி கல்லூரி முதல்வருக்கு ஒரு 'கருணை மனு' தீட்டினான். கடிதம் கைக்கு கிடைத்த சில நிமிடங்களில் ஹாக்கை அழைத்துவரச் செய்தார் கல்லூரி முதல்வர்.

"இக்கடிதம் எழுதியது நீயா?"

"ஆம்"

"இதுவும் நீதானா?" என்று கூறி 'நாத்திகத்தின்தேவை' என்ற புத்தகத்தை ஹாக்கின் கையில் திணித்தார் கல்லூரித்தலைவர்.

தக்க காரணம் எதுவுமின்றி இம்மாதிரிக் கேள்வியைக் கேட்பது எவ்வளவு அபத்தமானது என்பதையும், இம்மாதிரி அர்த்தமற்றகேள்வி யொன்றிற்கு பதிலளிக்க மறுத்தற்காக ஷெல்லியைக் கல்லூரியைவிட்டு விலக்கியது எவ்வளவு அநீதி என்றும் எடுத்துக் கூறி வாதிட்டான் ஹாக்.

"போதும் நிறுத்து உன் வாதத்தை!" என்று கோபத்துடன் கூச்சலிட்டு "உன்னையும்

விலக்கிவிட்டேன்'' என்று கூறினர். அவர் இருந்த வெறியில் கல்லூரி மாணவர்கள் எல்லோரையுமே விலக்கிவிடுவார்போல் தோன்றியது. அன்றுமாலை கல்லூரி அறிவிப்புப் பலகையில் கல்லூரி முதல்வர் கேட்ட சில கேள்விகளுக்குப் பதிலளிக்க மறுத்த குற்றத்திற்காக ஷெல்லியையும், ஹாக்கையும் கல்லூரியைவிட்டு விலக்கிய செய்தி முதல்வரின் கையெழுத்துடன் கல்லூரி முத்திரையும் வைத்து ஒட்டப்பட்டது.

காலைநேரம். கல்விகற்க வந்தவன் கவலையுடன் சென்றன் கல்லூரியைவிட்டு. கையில் காசு இல்லை. தந்தைக்கு செய்தி தெரிந்து அவரிடமிருந்து பதில் வரும்வரை லண்டனில் தங்குவதற்குப் பணமும் வேண்டும். புத்தக விற்பனையாளரிடமிருந்து இருபது பவுன் கடன் வாங்கிக்கொண்டு ஷெல்லியும், ஹாக்கும் ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தை விட்டு வெளியேறினர்கள். லண்டனில் மிகக் குறைந்த செலவில் ஒரு அறையை வாடகைக்கு எடுத்துக்கொண்டு அதில் இருவரும் தங்கினர்கள்.

ஷெல்லி கல்லூரியினின்றும் விலக்கப்பட்ட செய்தியறிந்த டிமோதி ஷெல்லி மிகவும் கோபங்கொண்டார். பாராளுமன்ற உறுப்பினரின் மகனுக்கு இந்தகதி நேர்ந்ததை நினைத்து தந்தை மனம் புழுங்கினர். அரசியலில் 'லிபரல்' கட்சியைச் சேர்ந்தவர் டிமோதி. ஆனாலும் அவர்கூட மத விஷயங்களில் பண்டைக் கோட்பாடுகளையும், பழைய ஆதாரங்களையும் வெறுத்துவிட முடியவில்லை.

"உன் ஒழுங்கற்ற நடத்தையாலும், கொலைகார எண்ணங்களாலும் உனக்கு நேர்ந்த துரதிர்ஷ்டத்திற்கு தந்தை என்ற முறையில் என் அனுதாபங்கள். இருந்தாலும் என் பெயருக்கும் பெருமைக்கும் தகுந்தாற்போலும், உன் தம்பி தங்கைகளுக்காகவும் நான் கடமைப்பட்டிருக்கிறேன். இவற்றிற்கு மேல் ஒரு உண்மையான கிருத்துவன் என்ற முறையில் உன்னிடம் மிகக் கண்டிப்பாக நடக்கவேண்டியிருக்கிறது. என்னிடமிருந்து பணம் பாதுகாப்பு, உதவி இவைகளை எதிர்ப்பார்த்தால் நீ கீழ்க்கண்டபடி நடந்துகொள்ள வேண்டியது அவசியம்.

(1) உடனடியாக பீல்டு பிலேசுக்குச் செல்ல வேண்டும்; அத்துடன் ஒரு குறிப்பிட்ட காலம்வரை ஹாக்குடன் எந்த விதத் தொடர்பும் கொள்ளக் கூடாது.

(2) "நான் தேர்ந்தெடுக்கும் குறிப்பிட்ட ஒரு சிலருடன்மட்டும் நீ பழகி அவர்கள் அறிவுரையை ஏற்று அதன்படி நடக்க வேண்டும்."

மேற்குறிப்பிட்டபடி நடக்க மறுத்தால் ஷெல்லி எந்தவித உதவியும் தன் தந்தையிடமிருந்து எதிர்பார்க்க முடியாது. என்று தீட்டினர் ஒரு கடிதம் ஷெல்லிக்கு. அதற்கு ஷெல்லியின் பதில் கடிதம் கீழ்வருமாறு இருந்தது.

"அன்புத் தந்தைக்கு,

உங்களின் எதிர்கால நடவடிக்கைகளுக்கு என் பதிலை எதிர்பார்ப்பதால் தங்கள் கடிதத்திற்கு பதில் எழுதுவது என் கடமையாயிருக்கிறது. 'தங்கள் பெயருக்கும் பெருமைக்கும் தாங்கள் பணிவுடன் பின்பற்றும் கிருத்துவத்தையும்' தாக்காமல் இருக்க முடியவில்லை. என் மனம் உண்மையிலேயே வருந்துகிறது. தங்கள் கடிதத்தில் கண்ட இரண்டு கட்டளைகளும் மேற்கொள்ளத் தகாதவை. 'உங்கள் அன்பிற்கு நன்றி!

தங்களிடம் பிரியம் உள்ள
கடமை மறவா மகன்,

பெ. பெ. ஷெல்லி.

தன் கண்டிப்பான கடிதம் பலன் தராததை நினைத்து மனம் வருந்தினர் டிமோதி ஷெல்லி. இயற்கையாகவே நல்ல குணம் படைத்தவர். இரக்கம் மிகுந்தவர். தனக்குப்பின் தன் சந்ததியாக இருப்பவன் ஷெல்லி. எப்பாடு பட்டாகிலும் அவனைத் தன் பாதைக்குத் திருப்பிவிட வேண்டும் என்று நினைத்தார். லண்டனுக்குச் சென்று தன் மகனுக்கு விருந்தொன்று நடத்தி அதில் ஷெல்லியிடம் மெதுவாகவும் நயமாகவும் பேசித் திருப்பிவிடலாம் என்று நினைத்தார். லண்டனில் உள்ள தன் நண்பன் கிரகாம் என்பவரை அழைத்துக்கொண்டு ஷெல்லியின் அறைக்குச் சென்றார். சாப்பாடு முடிந்ததும் தன் மகனை வேறு வேலையாக வெளியே அனுப்பிவிட்டு ஹாக்குடன் பேச ஆரம்பித்தார் டிமோதி ஷெல்லி. தான் எதிர்பார்த்ததைவிட நல்லவராகவும் இனிய பண்புள்ளவராகவும், ஹாக் இருப்பதாகக் கூறினர். தன் மகனைத் திருத்துவதற்கு தான் செய்ய வேண்டியது என்ன என்றும் ஹாக்கிடம் கேட்டார்.

"அவனிடம் கவலைகொண்டு அவனை பார்த்துக்கொள்ள அவனுக்கு ஒரு ஆள் தேவைப்படுகிறது. அத்தைமகளைத் திருமணம் செய

திருந்தால் நன்றாக இருந்திருப்பான்......அவனுக்குத் திருமணம் செய்தால் என்ன?"

"நான் எப்படிச் செய்யமுடியும்? நான் ஒரு பெண்ணை மணந்துகொள் என்றால் ஷெல்லி கண்டிப்பாக மறுத்துவிடுவானே, என்ன செய்வது?"

"ஒரு குறிப்பிட்ட பெண்ணைத்தான் மணந்துகொள்ளவேண்டும் என்று நீங்கள் கட்டளையிட்டால் கண்டிப்பாக மறுத்துவிடுவான் ஷெல்லி. அவனுக்குத் தகுந்த பெண்கள் என்று தாங்கள் கருதும் சில பெண்களுடன் ஷெல்லியைப் பழகச்செய்யுங்கள். ஆனால் திருமணம்பற்றிய பேச்சு எதுவும் அவனிடம் பேசக்கூடாது. அவர்களுடன் பழகி அவன் யாரையாவது விரும்பினால் திருமணம் நடத்திவைக்கலாம். அவர்களில் யாரையும் விரும்பாவிட்டால் வேறு சில தேர்ந்தெடுத்த பெண்களுடன் பழகச் செய்யவேண்டும்."

டிமோதி ஷெல்லியும் அவரது நண்பர் கிரகாமும் இந்தத் திட்டத்திற்கு இசைந்தனர். வெளியே சென்றிருந்த ஷெல்லி வந்தான். உயர்ந்த ரக ஒயின் கொண்டுவரச்செய்து பருகினார்கள். டிமோதி ஷெல்லி தன் புகழ்ப்பரணி பாடினார். பாராளுமன்றத்தில் தான் பெற்ற மதிப்பையும், தன் தொகுதியில் தான் பெற்றுப் பெருகிவரும் புகழையும் பற்றிப் பேசினார். அவரது நண்பர் கிரகாம் ஒத்துழைத்தார். ஒயின் வேலை செய்ய ஆரம்பித்தது டிமோதி ஷெல்லி பேசினார்.

"கடவுள் இருக்கிறார் என்பது நிச்சயம். கடவுள் இருக்கிறார் என்பதில் எந்தவிதத்திலும் ஐயமில்லை." அங்குக் கூடியிருந்தவர்களில் யாரும் எதுவும் பேசவில்லை. அவர் மேலும் தொடர்ந்து பேசினார்.

"இது குறித்து உனக்குச் சந்தேகம் எழுகிறதா?" என்றார் ஹாக்கை நோக்கி.

"இல்லை. சந்தேகம் எதுவுமில்லை."

"உனக்கு சந்தேகமிருந்தால், நொடிப்பொழுதில் நிரூபித்துக் காண்பிப்பேன்."

"ஆனால் எனக்குச் சந்தேகமில்லையே!"

"சந்தேகமில்லாவிட்டாலும் என்னுடைய வாதத்தைக் கேட்க விரும்புவாய் அல்லவா?

"விரும்புவேன்."

"சரி, நான் படிக்கிறேன் கேள்"

தன் சட்டைப்பையில் கையைவிட்டுச் சிறிது நேரம் துலாவினார். கடைசியாக ஒரு தாளை தேடி எடுத்து படிக்க ஆரம்பித்தார். ஷெல்லி மிகக் கவனமாகக் கேட்டான். சிறிது நேரங் கழித்து, "இந்த வாதத்தை இதற்குமுன் நான் கேட்டிருக்கிறேன்." என்று கூறிய ஷெல்லி, ஹாக்கை நோக்கி, "நான் எங்கே கேட்டிருக்கிறேன் இந்த வாதத்தை" என்றான்.

"பாலேயின் வாதம்" என்றான் ஹாக்.

"ஆம்! பாலேயின் வாதம்தான். ஆனால் பாலே இவற்றை எல்லாம் என்னிடமிருந்து கேட்டுத்தான் எழுதினான்" என்றார் டிமோதி ஷெல்லி. விருந்து முடிந்தது. டிமோதி வந்த காரியம் முடியவில்லை. ஷெல்லி தந்தையுடன் போக மறுத்தான். டிமோதி பணம் கொடுக்க மறுத்தார். மனமுடைந்த தந்தை தனயனைப் பிரிந்து சென்றார். சில நாட்களில் ஹாக்கும் தன் தந்தையின் அறிவுரைப்படி சட்டம் பயில யார்க் நகர் சென்றான். ஷெல்லி தன்னந்தனியாகப் போலந்து தெருவில் உள்ள அறையில் விடப்பட்டான்.

லண்டன்மாநகரம். கையில் காசு இல்லை. அன்புடன் பழக நண்பர்கள் இல்லை. வெறுப்பும் வேதாந்தமும் வளர்ந்தது. வாழ்வு நகர்ந்தது. ஹாக்கிற்கு கடிதம் எழுதுதல், துன்பச் சாயல் படிந்த ஏக்கப் பாட்டுகள் எழுதுதல், இவற்றில் காலத்தைப் போக்கினான் ஷெல்லி. உறக்கம்தான் சிறிது அமைதி அளித்தது விழித்திருக்கும்போது சிந்தனை சிறகடித்துப் பறந்து எங்கெங்கோ சென்று தன் அத்தை மகளின் அழகிய முகத்துடன் வந்து வருத்தத்தைத் தந்தது. "நான் காதலித்தது உள்ளம் தான். உடலையல்ல" என்று எண்ணித் தேற்ற நினைத்தான் உள்ளத்தை. பயனில்லை. பணக்கவலை வேறு குடைந்தது. தந்தையிடமிருந்து தகவலேயில்லை. ஒருநாள் தற்செயலாக ஷெல்லி தந்தையைச் சந்தித்தான். கோபம் மறையும் என்றெண்ணினான் ஷெல்லி. கடுகளவுகூடக் குறையக்காணோம். தந்தை தனயனைப் பார்த்த பார்வை கழுகு கோழிக் குஞ்சைப் பார்த்தாற்போல் இருந்தது. "தங்கள் கீழ்ப்படிதலுள்ள ஊழியன், ஐயோ!" என்ற கிண்டல் கணையைத் தவிர டிமோதி ஷெல்லியிடமிருந்து அன்பான சொல்லோ, பணமோ வருவதற்கு வழியில்லை. ஆனால் ஷெல்லியின் தங்கைகள் தங்களுக்குக் கிடைத்த பணத்தை மீத்து வைத்து ஷெல்லிக்கு அனுப்பிவந்தார்கள்.

★

(நாடகம்)—சென்ற இதழின் தொடர்ச்சி

வெற்றி யாருக்கு?

[அருணன்]

காட்சி—14

இடம்: வெற்றித்தோளன் வீடு

உறுப்பினர்: தர்மவதி - புனிதா - குணபாலன்.

குண: அம்மா!

புனி: வாருங்கள் வாருங்கள் அவர் இருப்பிடம் தெரிந்ததா? எங்கிருக்கிறார்? எப்படியிருக்கிறார்-நலமாக இருக்கிறாரா?

தர்: வா குணபாலா! என்கண்மணி பற்றிய தகவல் ஏதாவது கிடைத்ததா?

குண: ஆம் இப்போது தான் ஒற்றர் தலைவன் வந்து சென்றான். உடனே ஓடோடியும் வந்தேன்.

புனி: எங்கிருக்கிறார்?

குண: வீரவர்மன் பாசறையில் விருந்தினராக இருக்கிறாராம்.

தர்: அவனது நேர்மைக்கு என்றும் தீமை ஏற்படாது.

குண: ஆனால் நாட்டிற்கு அழிவு ஏற்படுமே! அம்மா!

தர்: நாடு! அழியட்டுமே இந்த நாடு! அவனை நாடுகடத்தியபோது ஆனந்தப்பட்ட நாடு அழியட்டுமே! அன்று என் மனம் எப்படித்துடித்ததோ அதுபோல் ஒவ்வொருவரும் துடிக்கட்டும். பார்! துணையைப் பிரிந்து துவண்டு நிற்கும் இப்பூங்கொடியைப் பார். இவள் வேதனையைக் கூடப் பொருட்படுத்தாது விரட்டியடித்த நாடு வெந்து சாம்பராகட்டும்.

குண: அம்மா! தாங்களா இவ்விதம் கூறுகிறீர்கள். நாட்டு மக்களின் தலைவி போன்ற தாங்களா இவ்விதம் கூறுவது. மக்கள் தவிப்பார்களம்மா! அவர்கள் ஏதும் அறியாத எடுப்பார் கைப்பிள்ளைகள்

தர்: என்மகனை நாடுகடத்த மட்டும் அறிவார்களோ! அன்று கண்மூடிகளாயிருந்தவர்கள் மண்மூடிப் போகட்டும் குணபாலா! போர் தொடங்கட்டும்! குணபாலா! அதில் என்மகன் தலைமை வகிக்கட்டும் நாளையே போர் தொடங்கினாலும் நான் இங்கிருக்க மாட்டேன். போர்காண அஞ்சியல்ல. இந்த நன்றி கெட்டவர்கள் நொந்து சாவதைக் கண்ணால் கண்டு களிக்கச்சென்று நிற்பேன் போர்க்களத்தில். கடைசியில் என் புனிதாவையும் கொண்டு நிறுத்தி நானும் போர் செய்வேன். தாய் என்னும் பாசங்காட்டி அவன் தயங்கினால், நன்றி மறந்த நாட்டிற்கு உடைந்தையாக இருந்த என்மீது பாசங்கொண்டு தயங்கும் அவன் மடமையைத் தகர்த்து அவனையும் கொன்று நானும் மடிவேன் போர்க்களத்தில்.

குண: அடேயப்பா! துரும்பு கேட்டாலும் துள்ளி எழும் உங்கள் துணிவான பேச்சைக் கேட்டால். வீரரின் தாயார் பேசினால் வெறுங் கூக்குரலாகவா இருக்கும். இன்னும் போரே தொடங்கவில்லை. அதற்குள் போர் முரசு முழங்கிவிட்டீர்களே!

தர்: ஆம்! போராயின் முரசு! அழிவாயின் ஆரம்ப அறிவிப்பு இந்தத் தர்மவதியினுடையது. வந்தவர்க்கு வழிபட்டு, வாழ்வளித்தவனைப் புறம்விட்ட வகைகெட்டவர்கள் வாழவேண்டாம். செயல்முறைத் தன்மையறியாது நாடு கடத்த முயன்றவர்கள் இனியும் வாழ வேண்டாம்-நானும் வாழவேண்டாம்.

குண: எல்லோர்க்கும் நல்ல வாழ்வு பிறக்கும்

புனி: அது என்றைக்கு என்று தான் எதிர்பார்த்து ஏங்கியிருக்கிறேன்.

குண: உங்கள் எண்ணம் விரைவில் நிறைவேறும். நான் வருகிறேன்.

* * *

முடிசூட்டுவிழா மன்றம்.

(ஒருபுறம் பூணன் தனியாக)

ஹ-ஹ-ஹ. இந்தக் கிழவனுக்கு மகுடம். பிறகு; இவன் நமது மகுடிக்குத்தலையாட்டும் குட்டிப் பாம்பு. நாமிட்டது சட்டம் கோரிநாட்டு ஆட்சி நம்கையில்-ஹ-ஹ-ஹ.

(விழா தொடங்குகிறது)

பூண: பெரியோர்களே! இன்று இந்த முடி சூட்டு விழா உங்களுக்கெல்லாம் ஆச்சரியத்தைத்தரலாம். உதடு கடந்தசொல் உலகம் கடந்து விடும் என்பதுபோல - வெற்றித்தோளனின் முடிசூட்டு விழாவைபவம் எல்லா நாடுகளுக்கும் பரவி விட்டது. அதனால், பூ இருந்த இடத்தில் பொன் இருப்பதுபோல, இந்த மகுடம், இன்று நாட்டின் நல்லவர்சிரத்தை அலங்கரிக்கப் போகிறது. எல்லோரும் ஒத்துழைத்து ஆட்சியை மேலோங்கச்செய்ய வேண்டும். இது தான் எனது அபேஷை.

ஒருவர்: (உம்-முரசுமுழங்கட்டும்)

(ஒருபக்கம் விழாமுரசு முழங்குகிறது. மற்றொரு பக்கம் வீரவர்மனின் தூதுமுரசு முழங்குகிறது. முடிசூட்டப் போகும் நேரம் தூதுவன் வருதல்)

பூண: யார் நீ.

தூது: அதை அறியத் தகுதியற்றவனிடம் பேச விரும்பாத வீரவர்மரின் தூதுவன். கோரிநாட்டை முடிசூட எண்ணி எமது அரசர் போர் தொடங்கியுள்ளார். நாளை காலை போர் முரசு முழங்கும் தயாராகிக்கொள்ளுங்கள்.

நன்றி கெட்டவர்கள், சுத்த வீரனுக்கு மதிப்புத் தருத தன்மையினர் ஆகியோருக்கு முட்டாள்களுக்கு நாட்டின் மணி முடி பொருந்தாது என்றே எமதரசர்போர் தொடங்கியுள்ளார்

(போய்விடுகிறுன்)

பெரி: ஆ!! போர். இப்போது என்ன செய்யலாம்.

பூண: செய்வதென்ன? போரிடவேண்டியது தான்.

பெரி: எப்படி முடியும் வெற்றித்தோளனும் இல்லை. வீரர்களும் அவனைப் பிரிந்த மனக் கவலையிலிருக்கிறுர்கள்.

பூண 1: நான் அப்போதே நினைத்தேன். வெற்றித்தோளன் நாடு கடத்தப்பட்டதை வீரவர்மன் அறிந்தால் சந்தர்ப்பத்தை நழுவவிடாது தாக்குவான் என்று.

பெரி: அப்போதே சொல்லுவது தானே!

பூண: எப்படி முடியும். நாடு கடத்துவதில் ஆத்திரங் கொண்டிருக்கும் நீங்கள் நான் சொல்லுவதைக் கவனிக்கவா போகிறீர்கள். இப்போது மட்டும் என்ன கெட்டுப்போய் விட்டது. வீரவர்மன் விரும்புவது கோரி நாட்டின் மணிமுடி. அதைக்கொடுத்து விட்டால் அடங்கிவிடுவான். நமது நாட்டிற்கும் ஒரு அரசன் தேவைதானே.

பெரி: சீ! எங்களை என்ன மானங்கெட்டவர்களென்று எண்ணி விட்டாய். உன் தவறல்ல உன்னை எங்களிடையே வளர்த்தது எங்கள் தவறு. அண்டிப் பிழைக்க வந்தாய்-ஆதரித்தோம்-அடுத்து வாழ்வதையே முழுமூச்சாகக் கொண்டிருக்கும் உனக்கு அந்தப் புத்தி எங்கே போகும்.

பூண: கோபித்துக் கொள்ளுகிறீர்களே! நமக்கும் அரசன் தேவையாயிற்றே என்பதற்காகச் சொன்னேன்.

பெரி: மேலும் பேசி அழிவைத் தேடிக் கொள்ளாதே. இங்கிருந்து ஓடிவிடு! உன் சொல்லை நம்பி ஏமாந்து நாட்டின் செல்வத்தை இழந்தோம். பேராசைகொண்டு பேடிபோல் தயங்கி நிற்கிறோம்-சிங்கம் தூங்கச் சுண்டெலி துள்ளித்திரிவது போலிருக்கிறது.

பூண: போதும்! நிறுத்துங்கள். நாங்கள் செய்தோமா? ஒன்றுமே அறியாத உங்களை ஏமாற்றினேமா? வீரன் தன் கால்களில் பணிகிறுன் என்ற தற்பெருமைக்காக உடன்பட்டீர்கள். அவனை எதிர்க்க அஞ்சி நாடுகடத்தினீர்கள். ஆட்சியில் அமோக ஆசை கொண்டு முடிசூட்ட எண்ணினீர்கள். உங்கள் செயலறிந்த அவன் படையெடுக்கிறுன். எதிர்க்க வகையின்றி என்னைச் சீறுகிறீர்கள்.

பெரி: பதரே! பிதற்றுதே! செத்தாலும் போரிட்டுச் சாவது எங்கள் ஜாதி. வீரத்தைத் தாய்ப்பாலுடன் அருந்தியது எங்கள் இனம்-போரிட்டுப் புகழ்பெற்றது எங்கள் நாடு—

(குணபாலன் வருகை)

குண: ஹ-ஹ-ஹ சாகாமல் உயிர் கொடுத்த வனை நாடுகடத்துவது உங்கள் ஜாதி-வீரத்தை மறந்து அறிவிழந்து நாட்டின் நண்பனை விரட்டுவது உங்கள் இனம்-பிறன் கையில் அகப்பட்டு உங்கள் உயிரையும் வாட்டுமே என்ற எண்ணத்தில் ஏங்கவைப் பது உங்கள் நாடு—ஏன்! ஏன் திகைக்கி றீர்கள்? குணபாலன் சொற்கள் குத்து கிறதோ ஈட்டிபோல! நொந்த உள்ளத்தோடு சென்றாரே பெருந்தகை எத்தனை அம்புகளா கப் பாய்ந்தது உங்கள் சொற்கள்.

பெரி: குணபாலா!

குண: இரவு பகலென்றும் பாராது; இளம் காதல் வாழ்க்கையையும் கருதாது; தனி மையென்று கூடத் தளராது போரிட்டுச் சாவின் எதிர் நின்று வெற்றிகண்ட வீரனை வேற்று நாட்டவன்போல் 'போ வெளியே' என்று விரட்டினீர்களே எங்கே அந்தக் கம் பீரம்.

பெரி: குணபாலா!

குண: எந்த ஆசையும் இல்லாத வெற்றித் தோளரை இழிவு படுத்திப் பெற்ற தாயை யும் பேணிப்போற்றிய மனைவியையும் கண் கலங்கக் கைவிடச்செய்து கதியற்றவர்போல் கவிழ்ந்ததலை நிலம் நோக்கச்சென்றாரே அந் தக் கட்டிளஞ்சிங்கம்.

பெரி: குணபாலா!

குண: குறிவைத்திருக்கும் வீரவர்மனுக்கு நாட்டினின்றும் பிரிக்கப்பட்ட வீரர்தலைவன் துணையும் தக்கபடி கிடைத்திருக்கிறது. சிங்கத்திற்கஞ்சியிருந்த யானைக்கு அதன் நட்பும் கிடைத்துவிட்டால் சிறுத்தைகூட முன்னிற்க முடியாதே-சிறு முயல் கூட்டம் எங்கே எதிர் நிற்கமுடியும். புத்தியை இழந்து புதுமோகம்கொண்ட உங்கள் எதிர் காலத்தை நினைத்துக்கொள்ளுங்கள்.

பெரி: குணபாலா! வெற்றித்தோளன் வீர வர்மன் பாசறையிலா இருக்கிறான்?

குண: ஆம். அடித்த கோலின் திசை நோக்கிப் பாய்கிறது அவரது போர்க்கண் கள்.

பெரி: நாட்டிற்கு நிச்சயம் அழிவுதான். இதற்கென்ன செய்யலாம்.

குண: பூணர்களைக் கேளுங்கள்! வேண்டும் போது உபதேசம் செய்யும் அவர்கள் இதற் கும் ஒருவழி சொல்வார்கள்.

பெரி: பரிகாசத்திற்கு இதுவா சமயம். குண பாலா! உன்னையே நம்பியிருக்கிறோம். இந்த நாடு அழிவது உனக்குச் சம்மதமா! நீ எண் ணினால் நாடு நமதாகும் இல்லையேல் நாடு நாசமாகும்-ஏன் அதை நீ விரும்புகிறாயா? எங்கள் புத்தி கெட்டதால் வீரனை இழந் தோம். அதை உணர்ந்தவன் நீ! உன் பரா முகத்தால் நாட்டை இழப்பதுதான் அதற் குற்ற பரிகாரமா?

குண: (யோசித்து) நம்மால் ஆவது எதுவு மில்லை. தனிமனிதனின் சீற்றமே போருக்கு முதற்காரணம். ஆகையால் அவர் சினம் நீங்கவேண்டும். அதை நம்மால் மாற்ற முடி யாது. தர்மவதி அம்மையாரிடம் சென்று முறையிடுவோம். அவர்கள் இரங்கினால் நல்வாழ்வு; இல்லையேல் சாவுதான்.

பெரி: அப்படியே செய்வோம்.

(போகின்றனர்)

காட்சி—15

இடம்: தர்மவதி அம்மாள்வீடு.

உறுப்பினர்: தர்மவதிஅம்மாள்-புனிதா குணசீலன் பெரியவர் மற்றும் சிலர்.

நிகழ்ச்சி: குணபாலன் - முன் சென்று தர்மவதியை அழைக்கிறான்.

குண: அம்மா-அம்மா.

புனி: (விரைந்து வந்து - குணபாலனைப் பார்த்து மகிழ்வோடு-) வாருங்கள்!(அடுத்து நிற்பவர்களைக் கண்டதும் மௌனத்துடன் உள்ளே சென்று தர்மவதியின் பின்புறமாக வந்து நிற்கிறாள்.)

தர்: வா-குணபாலா-ஓ நாட்டின் மன்னர். ஏழையின் குடிசை நோக்கி ஏது இவ்வளவு கிருபை. ஒருவேளை எங்களையும் நாடு கடத்த.......

பெரி: பெண்களை நாடுகடத்தும் பேதமை கொண்டவர்களல்ல கோரிநாட்டவர்.

தர்: நாடுகடத்தும் எண்ணம் கொண்ட உங் கள் வெறி உள்ளத்தில், பெண்கள் ஆண் கள் என்ற பாகுபாடுவேறு இருக்கிறதா? கடந்ததைப்பற்றி ஏன் பேச்சு. இப்போது ஏனிங்கிவந்தீர்கள்.

(மௌனம்)

ஏன்? ஏன் பேசாமலிருக்கிறீர்கள். ஏன்? மௌனம் சாதிக்கும் உங்களை நான்தான் ஏன் வற்புறுத்திக் கேட்கவேண்டும். உங்கள்

வார்த்தையை எதிர்பார்த்து ஆவது எதுவுமில்லை போய்வாருங்கள்.

பெரி: அம்மா! (குணபாலனைப்பார்த்து) குணபாலா ஏனிந்தச்சோதனை. தயவு செய்யப்பா.

தர்: இதென்ன நாடகம் குணபாலா?

குண: புத்திவரவு நாடகம். அபயம் புகும்கட்டம்,

தர்: அதற்கு இவர்கள் கண்டுபிடித்த அமைப்பான நடிகன் நீ. இந்த வேஷதாரிகளின் தோற்றம் இன்னுமா உன்னை மயக்குகிறது.

பெரி: அம்மா! வேஷமிட்டு விஷத்தை மறைக்கும் வீணர்களால் வீணுனோம். ஒற்றுமையை யிழந்தோம். உறுதியை உருக்குலைத்தோம்-பலர் மெச்சப் புகழ்கொண்ட நாங்கள் பலர் இகழப் பஞ்சைகள்போல் நிற்கிறோம்.

குண: ஆமாம் தாயே! வீரவர்மன் நாட்டின் மீது போரறிவிப்பு செய்துவிட்டான்.

தர்ம: உனக்கேன் அச்சம் குணபாலா! வீர பரம்பரையினர் இருக்கிருர்கள் போர்புரிய. உனக்கு ஏன் அச்சம்.

குண: அம்மா! எல்லாம் அறிந்த தாங்கள் இவ்விதம் அலட்சியம் செய்தல் தகுமா? வெற்றித்தோளர் வீரவர்மனுடன் இருக்கிருர். ஆற்று வெள்ளத்திற்கே அணைபோட முடியாதென்னும்போது கடல் கொந்தளிப்புக்குக் கைமண் கொண்டு கரை கட்ட முடியுமா? அந்த ஒருவருக்காகவே அஞ்சியிருந்தான்வீரவர்மன். இப்போது அவரும் அவன்வசம்-ஆகையால்.

தர்: அவன் மட்டும் என்ன பிரமாதத்தை சாதித்துவிடுவான். இந்த வீரரின் சுண்டு விரலுக்கு எதிர் நிற்கமுடியுமா அவனல்.

பெரி: எங்கள்மீது இரக்கமில்லையா? வேண்டாம், நாடு நாசமாவது உங்களுக்குச் சம்மதமா?

தர்: இரக்கம்! அழுத கண்ணீரோடு ஆயிரம் முறை அலறி உங்களை அன்போடு கெஞ்சினுளே (புனிதாவை இழுத்து முன்னிருத்தி) இந்தஅபலை, அப்போது உங்களுக்கிருந்ததா இரக்கம்! இளங்கொடியைப் பிரித்துக் கொம்பை அகற்றினீர்களே, அப்போதிருந்ததா இரக்கம்! மணிமகுடம் வேண்டாம், மனைவியும் கணவனுமாய் வாழ்வதுபோதும் என்று மன்ருடினுளே இந்த மங்கை, அப்போது வந்ததா இரக்கம். மமதையால் நாடு கடத்தினீர்கள். தாயையும் - தனயனையும் தனியாக்கினீர்கள் இப்போது

பெரி: தவிக்கிறோம் தாயே! கண்ணைக்குத்திவிட்ட விரலை வெட்டிவிடுவதென்றே முடிவு செய்துவிட்டீர்களா?

தர்: கண்ணைக் குத்திய விரல்! நல்ல உபமானம். உடலுடன் சேர்ந்து அதுவும் துயரப்படுமே! நீங்கள் உல்லாசமாக முடிசூட்டவல்லவா முனைந்திருக்கிறீர்கள். போர் முரசு கொட்டாவிட்டால் உங்கள் புகழொலியல்லவா முழங்கியிருக்கும். திருடித் திரும்பும் போது தேள் கொட்டியதால் திக்கற்றுப் பிடிபட்டுவிட்டீர்கள். இல்லையேள் தீரவரலாறல்லவா தீட்டிக்கொண்டிருப்பீர்கள.

பெரி: எங்கள் ஒருசிலருக்காக நாட்டை நாசம் செய்வதா?

தர்: நாடு! எங்கே இருக்கிறது நாடு. இந்த நாட்டிற்கு நல்லறிவு இருந்திருந்தால் நய வஞ்சகரின் சொல்லால் நாடு கடத்தாதே ஒரு நல்ல வீரனை என்று கூறியிருக்காதா! அன்று, இந்த நாட்டின் பல திக்குகளிலுமிருந்துதான ஒலித்தது. "விரட்டுங்கள் என்ற வெறிக்குறல். இன்றைக்கு நாடு நாசமடைவதைப்பற்றி நான் ஏன் கவலைப்பட வேண்டும். பத்துமாதங்கள் சுமந்து பெற்று, பாடுகள் பல பட்டு வளர்த்து, வளமாக வாழ்வதைக் கண்டு மகிழ எண்ணியிருந்த என் கண்மணியைக் கவிழ்ந்த தலையோடு செல்லக் கண்டும் கலங்காது கல்லாயிருந்த இந்த நாட்டைப்பற்றி நான் ஏன் கருத வேண்டும்? போரிலே உயிரைப் பணயம் வைத்துப் போராடி நாட்டைக் காத்த நல்லவனை நாணத்தோடு வெந்து நொந்துசெல்ல விரட்டிய இந்த நாட்டைப்பற்றி நான் ஏன் விசாரப்படவேண்டும்?

பெரி: குணபாலா! நீ சொல்லப்பா!

குண: அம்மா!

தர்: குணபாலா! யாரும் என்னிடம் பேச வேண்டாம். இந்த நாடு அழிவதைக் கண்டு நான் மகிழுகிறேன். வெந்த உள்ளத்தைப் பற்றிச் சிந்தியாது சிரித்துக்கொண்டிருந்த சிறுமதி படைத்தவைகள் சிதைவதைக் கண்டு நான் சிந்தைகுளிர்கிறேன். அழியட்டும் இந்த நாடு! அடங்கட்டும் ஆணவக்காரர்களின் ஆர்ப்பாட்டம்! புகழ்ச் செல்வத்

தால் பூரித்து விளங்கிய நாடு சுடுகாடா கட்டும்.

குண : அம்மா! இதென்ன விபரீத எண்ணம்! ஒரு நாட்டின் தாய்போல விளங்கும் தாங்களா இவ்விதம் பேசுவது? நாட்டின் அழிவுக்குக் காரணம் ஒரு தாயின் சீற்றம் என்ற சொல்லை ஏற்க உங்கள் உள்ளம் உறுதிகொண்டுவிட்டதா? நீங்கள் பிரிந்திருப்பது ஒரு மகனை. அதற்காக நீங்கள் பிரிக்க நினைப்பது பல தாய்கள் பெற்ற பல மக்களின் உயிர்களை. இதுதான் நீங்கள் செய்துள்ள முடிவா? வெளியேறுது அன்றே எதிர்த்திருந்தால் நாட்டவர் என்ன செய்ய முடியும்? ஒருவேளை இவர்கள் நல்ல மதி பெறட்டும் என்றுகூட அவர் எண்ணி இருக்கலாம். சிங்கம் குகைக்குள் தூங்க சிறுநரி தனக்கு இறை வேண்டும் என்பதற்காக மந்திரியாகி உயிர்வாங்கும் நிலை பெற்று விடுவதும் உண்டல்லவா? அதுபோல சமயம் பார்த்திருந்து வீரவர்மன் காரியம் சாதிக்கிறான் நம்மவரைத் துணைக் கொண்டு. இதனால் அழிவு நேர்ந்தால் தருணத்தில் உதவாத பழி உங்களைத் தானே சேரும்.

தர் : என்னை என்ன செய்யச்சொல்லுகிறாய்?

குண: வெற்றித்தோளரிடம்சென்று அவரைச் சமாதானப்படுத்தி நாட்டிற்கு அழைத்து வந்து விடுங்கள். அவர் இங்கிருந்தால் வீரவர்மன் போர் தொடுக்கமாட்டான்! நாடும் நல்வாழ்வு வாழும்-கெடுமதி படைத்துக் கேடுற்றுத்திருந்தியவர்கள் இனிக் கெடவும் மாட்டார்கள். இதுதான் தாங்கள் இப்போது செய்யவேண்டியது.

தர் : உம்-எப்படிச்சென்று அவனைக் காண்பது.

குண : இதைஎண்ணவேண்டியவர்கள் தாங்களல்ல, நாங்கள். வீரரின் தாயாருக்கு வீரவரவேற்பிருக்கும் பாசறையில்-தாமதிக்காமல் செல்லுங்கள் தாயே!

(புனிதா உள்ளே சென்று தனக்குள்)

புனி : அத்தான்! உங்களைக்காணவரப்போகிறாள் உங்கள் புனிதா! போர்ப்பாசறை; அங்கே வீரர்கள் நடமாட்டம் என் இதய விளக்கின் எழிலான இருப்பிடம். இவற்றையெல்லாம் காணப்போகிறாள் இந்தப் புனிதா.

(தர்மவதிவருகை)

தர் : புறப்படுபுனிதா-பாசறைக்குச் சென்று வருவோம்.

புனி : தயாராய் காத்திருக்கிறேன்.

(வெளியே)

குண : நீங்கள் அவர்கள் செல்வதற்குவேண்டியவைகளை ஏற்பாடுகளைச் செய்யுங்கள்.

(தர்மவதி வந்து)

தர் : போவோம் குணபாலா!

குண : காத்திருக்கிறோம் தாயே!

தர் : வேறுயாரும் வரவேண்டாம். நாம்மூவர் மட்டுமே போவோம்.

குண : என் விருப்பமும் அதுதான் தாயே! ஆனால் நானும் பாசறைக்கு வந்தால்-அவர் இணங்க மறுத்து என்னை அழைத்துச்செல்லும்படி வற்புறுத்தி அனுப்பிவிடுவார். ஆகையால், சமீபம்வரை......

தர் : உசிதப்படி செய்வோம்.

எல் : வெற்றியுடன் திரும்பிவாருங்கள்.

காட்சி—16

இடம் : பாசறை.

நிகழ்ச்சி : வெற்றித்தோளன் அமர்ந்திருக்கிறான்-தூதுவன் வருகை.

வெற் : என்ன செய்தி.

தூது : போருக்கு அறிக்கை கொடுத்துவிட்டு வந்து விட்டேன்!

வெற் : அவர்கள் என்ன தெரிவித்தார்கள்.

(வீரவர்மன் வந்து)

வீர : செய்தி சொல்லி மறுமொழி கேட்டுவருவதற்கல்ல தூதனுப்பியது. ஆக்கிரமிப்புப் படையெடுப்பை அறிவித்துவர. அவர்கள் என்ன சொன்னால்தான் என்ன! பல்லிடுக்கில் பட்டுவிட்ட புழுவிடம்-மீன் பதில் கேட்டுக் கொண்டா இருக்கப் போகிறது. பதட்டங் கொண்டு செய்த செயலுக்குரிய பலனை அனுபவிக்கப் பக்குவம் செய்து கொள்ளத் தான் தூதனுப்பினேன். அவர்தம் காதுகளிலே போர்முரசு ஒலிக்கும்-வெற்றித்தோளரின் சிரத்திலே கோரிநாட்டு மணிமுடி இருக்கும், இதுதான் இந்தத்தூதின்பலன்.

வெற் : ஒருபாவமும் அறியாதவர்கள் வீரவர்மா! பாழும் பூணர்களின் புன்னகையில் புத்தி இழந்துவிட்டார்கள். நல்லச்சிரித்து

நஞ்சூட்டும் அந்த நச்சரவுகளின் நளினத்தில்மயங்கி விட்டார்களே தவிர, மமதை கொண்டவர்களல்ல - மதியிழந்தவர்கள்.

வீர: இழந்த மதியை இனிப்பெறமுடியாத அவர்களுக்கு இப்போர் ஒரு புதுமதி புகட்டும்.

வெற்: எப்படி ஆகுமோ ஆகட்டும். தூதுவனே என் அன்னையார்-மனைவி இவர்களைப் பற்றிய செய்தி யாதேனும் அறிய முடிந்ததா உன்னால்.

தூது: இல்லை.

வெற்: இந்தப் பூணர்கள் அவர்களுக்கும் என்ன தீங்கு செய்வாரோ!

காட்சி—17

இடம்: நெடுஞ்சாலை.

உறுப்பினர்: குணபாலன், தர்மவதி, புனிதை.

நிகழ்ச்சி: வழியில் மூவரும் பேசிக் கொண்டே வருகின்றனர்.

குண: வெற்றிச் செய்திகளைக் கேட்டு இன்புற்று இறுமாந்திருந்த நாம், வீணர்கள் நுழைவால் இன்று வேற்று நாட்டவனின் பாசறை நோக்கி வலிந்து செல்லவேண்டி வந்துவிட்டது. எதிரிகள் நம்மை நாடி நடந்தனர். எவ்வாறு அந்த நிலை சென்று மறைந்ததோ!

தர்ம: பலவாறு எண்ணிப் புண்ணாய்ப்போன மனதிற்கு ஒருவாறு அமைதி கிடைக்குமே என்றுதான் அந்த அறங்கெட்டார் செயலை மறந்து சொல்லுக்கிணங்கிப்புறப்பட்டேன். அங்கே என் கண்மணி எப்படி எப்படி இருக்கிறானோ! எவ்விதம் கண்டு பேசித் திரும்புவேனோ!

குண: எண்ணாதவண்ணம் எண்ணி வீணாக மனதைக் குழப்பிக்கொள்ளாதீர்கள். வீரரின் தாயாருக்கு வேண்டிய வரவேற்பிருக்கும் பாசறையில். ஆனால் அவர் உள்ளந்தான் நாட்டுக்கு மீண்டும் வருகின்ற நோக்கத்தைக் கொண்டிருக்குமா என்று அய்யப்படுகிறேன்.

தர்ம: அவன் வரமறுத்துவிட்டால் மற்றென்ன செய்வது குணபாலா!

குண: வற்புறுத்தி அழைத்துப்பாருங்கள், எனக்கென்னவோ அவர் வரஇசைவாரென்ற நம்பிக்கையே கிடையாது.

தர்ம: அப்படியானால் எதற்காக இந்த முடிவுக்கு வந்தாய்-அதற்கு எங்களையும் ஈடுவைத்திருக்கிறாய்.

குண: எதற்கும் உருகாத கல் வெய்யிலுக்கு உருகுகிறதல்லதா?

தர்ம: அவ்வளவு கடுமையாகவா அவனிடம் நடந்து கொள்ளச் சொல்லுகிறாய்.

குண: இல்லை! இல்லை! உதாரணத்துக்காகச் சொன்னேன். வெய்யிலுக்குக் கடினமென்மை யென்ற பாகுபாடு ஏதம்மா! ஒரே இடத்தில் நிலையாகத் தன் ஒளிக்கிரணத்தின் வன்மையைச் சிறிது நிலைக்கச்செய்த உடன் தானே கல் உருகுகிறது. ஆனால் உருகும் அளவுக்கு முன்னும் பின்னும் கிரணத்தின் தன்மை உறுதிப்பட்டு வருகிறது. அதுபோலத் தாங்களும் மென்மையாக, இதமாக, அன்பாக, பண்பாக, இனிமை காட்டி, உரிமை நாட்டி, நாட்டிலும் நம்மீதும் பரிவுகூட்டி, பிறகு மாறமுடியாத நிலைமையை ஏற்படுத்திக் கொள்ளுங்கள், அவரும் மறுக்கமாட்டார்.

தர்ம: இத்தகைய நாட்டுப்பற்றும் நல்ல திறமையும் உள்ள உன்னைப் போன்றவர்கள் இருந்தும் அன்று அவர்கள் நிகழ்த்திய கூற்றை மறுக்கமுடியவில்லையே!

குண: மறுப்பதில் பயனில்லை யென்பதால் வாளா இருந்து விட்டோம். ஒன்று இரண்டாக, எண்ணிக்கையில் குறைவாக நுழைந்தவர்கள் எண்ணத்தரமற்ற கொடுஞ்செயல்களை நிறையச்செய்ய ஆரம்பித்து விட்டார்கள். அவர்கள் கையாளுவதெல்லாம் பழமையை முன் நிறுத்தி அதன் சாயலிலே தொடர்கின்ற காரியங்களாகவே தோற்றமளிக்கின்றன. ஆனால் அதன் உள்நிறைவும் பயனும் பழமையை அழித்துத் தங்கள் விருப்பத்தைப் புதுமையாகப் பொருத்தும் நோக்கம் கொண்டவைகளாகவே இருக்கின்றன. அவர்களிங்கே வந்தபோது நம்மவர்களின்-மொழி-பண்பு-வாழ்க்கைமுறை எதுவும் அறியாதவர்களாகவும், அவற்றில் எவ்வாற்றாலும் இணையாதவர்களுமாகவே இருந்தனர். அன்றியும் எந்தவகையிலும் நம்முடன் இணைய முடியாத தன்மையும் அவர்களிடையே இருந்தது. பொதுவாகக் காணும்போது யாத்திரிகர்களோ-அல்லது நாடுகாண வந்தவர்களோ என்ற நம்பிக்கையோ - எண்ணமோ நமக்குத் தோன்றவில்லை! நாடுகடத்தப் பட்டவர்களாக அல்லது நிலைக்களனற்றுக் குடியேறிய

வர்களாகத்தான் நமக்குத் தோற்றியது. அத்தகையவர்கள் இங்கு வந்ததும் நம் முடன் இணைய முடியவில்லையே என்று வருந்தவோ முயற்சிக்கவோ இல்லை - நம் மைத்தங்களுடன் சேர்ப்பதென்ற ஒரே நோக்கத்துடன் செயலாற்றமுனைந்தார்கள். அதற்கென கருத்துடன் கூட இருந்து நம் மவரின் நாட்டமும் நோக்கமும் எத்தகைய தெனத் தெரிந்துகொண்டு செயலாற்ற முற் பட்டு விட்டனர். நாம் பழமையின் பால் பற்றுடையோர் என்பதையும், இரக்கம், நேர்மைநழுவாப்பண்பு ஆகியவற்றை நித்ய வாழ்வாகக் கொண்டவர்களென்பதையும் தெரிந்து கொண்டார்கள். அதையே அடிப் படையாகக்கொண்டு தங்கள் கருத்துக் கேற்ப புதிய ஒரு பழைமை முறை-தங்கள் விருப்பத்தின் படியொரு பண்பாட்டு முறை ஆகியவைகளைப் பொய்யுடனே புனைந்து ரையும் கலந்து அவரவருக்குக்கிடைத்தவர் களிடையே புகட்டினர். கோரிநாட்டாரின் உள்ளத்தைப் புறட்டினர். தலையானவர் களைக் கையுள் அடக்கினர். அதுவரைதான் அவர்கள் விடாமுயற்சி தேவைப்பட்டது. அதன் பிறகு நம்மவர்கள் இயல்பின்படி, தலைமை எவ்வழி-தலைமையைச் சார்ந்தார் அவ்வழி என்றநிலை வந்தது-அவர்கள் எண் ணமும் பயன் தரவிளைந்தது. உறுதியும் தன் னம்பிக்கையும் தளர்ந்தது-ஒருவருக்கொரு வர் மாறுபடுகின்ற தன்மை வளர்ந்தது- இணைந்து இரண்டற்றிருந்த தாய் சேய்மை உறவு குலைந்தது-நேர்மை அடியோடு ஒழிந் தது. இப்போது நாம் வழிநடக்கின்ற தன்மை வந்து சேர்ந்தது. இன்னும் எவை வருமோ என எதிர்பார்த்திருக்க நேர்ந்தது?

தர்ம: எதிர்ப்பார்த்தோமோ இல்லையோ! மலர்ந்து மணந்திகழ இருந்த நாடு-மடிந்து மண்ணாகும் வகை வந்து விட்டதே! இப் போது என் மனம்படும் வேதனையெல்லாம் அது தான். ஒருபக்கம் நாடு-மற்றோர்புறம் நான் பெற்ற மகன்; ஒரு மருங்கில் மக்கள்- மற்றோர்சார்பில் மைந்தன்; ஒரு கூட்டத் தினர் மமதையால் மகனையும் தாயையும் பிரிந்தவர்கள், தனிமையிலே, தாய் சொல் தவறாத தனயன்: அன்று "அம்மா! தாங் களா இப்படிக்கூறுகிறீர்கள்" என்று தணி யாத வேகத்தில் கேட்டான். "ஆம் நான் தான்கூறுகிறேன்! போ!" என்றேன். மறுத் தானா? மாதாவின் சொல்லென்ன மண்ட லத்தின் எதிர்ப்பையும் தாங்கி எதிர்க்கும் வல்லமைபடைத்துள்ள மாவீரன் அவனா லும்-என்சொல்லுக்கு எதிரில்லை என் பதை எடுத்துக்காட்டுவது போல "போகி றேனம்மா" என்று போனானே! அன்று அவன் செயல் முறையைக் கண்டிருந்த காரணத்தினால் தானே இன்று தாயின் சொல்கொண்டு அவனைத் திரும்ப அழைத் கொள்ளலாமென்று துணிவைக் கொண் டார்கள் நாட்டினர். ஆனால் குணபாலா! தாய் தான் நான்-எனக்கில்லாத உரிமை எவருக்கும் அவனிடம் இல்லை என்பதை நானறிந்திருந்தாலும் அவனெதிர் சென்று நின்று மீண்டும் நாட்டுக்குவா என்றழைக்க நாணுகிறதே என் தாய்மையும். எப்படிக் கூறுவேன். "தாயே! தங்கள் மகனின் மானத்தைக் கெடுக்கக் கருத்துக்கொண்டு விட்டீர்களா" என்று கேட்டால், ஆம் என் பேனா! அல்லவெனக்கூறுவேனா? ஆம் என்பேனாகில் மானங்கெடமாட்டேனென் றால் இல்லை நீ மானத்தைக் கெடுத்துத் தான் ஆக வேண்டுமெனக் கூற வஞ்சகனும் கொஞ்சம் அஞ்சுவானே! நானெவ்வாறு மிஞ்சிப்பேசுவேன்! அல்ல என்பேனாகில் பின் தாங்களிங்கு வந்தவகை என்ன என் பானே என்ன சொல்வேன்.

குண: இவற்றையெல்லாம் இப்போது எண்ணி உள்ளத்தை வாட்டிக்கொள்ளாதீர் கள். எத்தனை முறைகளில் அவர் மறுத் துக் கூறினாலும் அத்தனைக்கும் ஒரு மாற் றம் கூறித் தாங்கள் அவரைத் தேற்றி நாட் டுக்கு மீட்டு அழைத்துவர வேண்டும். அது தங்களால்தான் ஆகும். நாட்டிற்குள் நான் வர மாட்டேனென்பார். நீயல்லாது நாட்டி னுள் புகமாட்டேனென்று கூறுங்கள். தன் கருத்தைப் பிடியாகக் கொண்ட அவர் தாங் களும் இங்கேயே இருந்துவிடுங்கள் என்று கூற முற்படலாம். நீயே விருந்தாக வந் திருக்கும் மாற்றவன் பாசறையில் மனைவி யும் தானும் உடனிருக்கக் கூறுவதும் அப் படி சூழ்நிலையைத் தேடுவதும்முறை யாமா? என்று விலக்குங்கள். எந்த முறையுமின்றி நாடுகடத்தப்பட்டிருக்கும் நான் நாடோடி போன்றவன்தானே! நடோ டிக்கு எத்திசையும் தன் இருப்பிடந்தானே! அவன் உறவுக்கும் உடன்பிறப்புக்கும் உரி யதுவும் அதுதானே என்று உபாயம் கூறு வார்! நாடுகடத்தப்பட்டவனை மீண்டும் அந்தநாடே தவறுணர்ந்து வருகவென வர வேற்கும் போது மாட்டேனென மறுப்புரை தருதல் முறையா? என்று அதற்கும் ஒரு பதில் கூறுங்கள்.

தர்: இவ்வளவையும் அவன் ஏற்றுக்கொள் வான், பதில் கூறுவானென்று நாமெப்படி

நிச்சயமாக நம்ப முடியும்? முதலில் நான் பாசறைக்குள் செல்லத்தான் முடிகிறதோ- அல்லது அவன் மீது கொண்ட பாசத்தின் காரணத்தால் எங்களைத் தவருகப் புரிந்து கொண்டு காவலரே காண இயலாதென அனுப்பி விடுகிருர்களோ தெரியவில்லை. அப்படித்தான் நேர்ந்தாலும் அதை மீறி நடந்து கொள்ள என்ன தன்மை இருக்கிறது. மகனின் இருப்பிடத்தை மாதாவுக்கு மறுப்பேது என்பேனே? கண்மணியைக் காணது உயிர் கெடினும் அகன்று செல்லேனெனக் கூறுவேனே? எனத்தான் இல்லையாயின் இணைந்திருக்கும் இல்லத்தாள் இவளையேனும் செல்லச் செய்யென்று எதிர் நிற்போன்தனை இறைஞ்சி ஏற்குமுறை கேட்பேனே? ஏது செய்வேன்?

குண: எண்ணத்தை வளர்த்து, தேவையற்ற செய்திகளை நிகழ்வதாய் நினைத்து விட்டு அதன பின்னே நீங்களும் சென்று சிலையாகி விடுகிறீர்கள். சொல்லத்தான் படுமா? நீங்கள் சொன்னவற்றின்சிறுகூறும் அவ்வாறு செல்வாரின் உயிர் உண்டென்று எண்ணத்தான் ஏலுமா? வெற்றி என்று கூற முடிப்பதன்முன் தோளரென உரைக்கின்ற உள்ளத்தான் வீரவர்மன். கள்ள எண்ணத்தால் நம்மவரைக் கவர்ந்து செல்லும் கயவனல்ல. எண்ணத்தில்-சொல்லில்-செயலில் அனைத்திலுமே அண்ணலின் அருந்துணையைப் பெரும்பயனே என் றேற்றுப்பெற்று மகிழ்கின்ற பெற்றியினன். நம்மவர்க்கு வந்துற்ற நிலை தன்னையெண்ணித் தன் உள்ளத்தில் கொண்ட, ஆற்ற ஒண்ணுத்துன்பத்தால் அதன் பயனுக வந்த அடங்காத சீற்றத்தால், நாட்டின் மேல் போர்ச்செய்தி விடுத்தானே யல்லாமல் அடுத்துக் கெடுத்தாளும் குள்ளநரிக் கூட்டத்தானல்ல வீரவர்மன். நல்ல குணக் குன்று, நம்மவர்மேல் மாருத பற்றுண்டு, மட்டற்ற மதிப்புண்டு-அன்னேன் செயல் முறையில் சற்றும் மாசில்லாச்சிறப்புண்டு, இன்னும் என்னென்ன நல்ல முறை வகையுண்டோ அத்தனையும் அணுவளவில் வழுவாது காத்துத் தன் வரையில் செயலாற்றும் செம்மை நிறை பண்புகு இவற்றில் தினையளவும் பழுதில்லாதிருக்குமென்ற குறைவற்ற நம்பிக்கை எனக்குண்டு. எனவே தங்களின் வருகையை அறிந்தவுடன் அரன்முறை வரவேற்பு அடுத்து வந்து காத்திருக்கும். தாங்கள்தான் எந்த வழிமுறையெல்லாம் எடுத்தியம்பச் சாத்தியமோ-எவ்வழியைக் கைக்கொண்டால் அவர் இணங்கி வரல் சாலுமோ-அதனை உங்கள் தாயுள்ளம் கூறுகின்ற தன்மைவழி எடுத்துக்கூறி இணங்கவைத்து நாட்டுக்கோர் நல்லமுறை செய்து தரவேண்டும் இல்லையெனில் மீண்டிடுதல் இல்லை.

தர்: அதை நானும் உணர்கிறேன். புறப்பட்டு வந்தபொழுதிலிருந்து அதே நினைவில் தான் வந்து கொண்டிருக்கிறேன். எப்படியோ புறப்பட்டு வந்த நான் அவனைச் சந்திக்காமல் திரும்பப் போவதில்லை.

குண: தாயே! பாசறையின் சமீபம் வந்து விட்டோம். நான் இங்கேயே தங்கி விடுகிறேன். தாங்களிருவரும் செல்லுங்கள். காவலர்கள் கேட்டால் வெற்றித்தோளரின் தாயும் மனைவியும் இவரைக்காண வந்திருக்கின்றனரென்ற செய்தியைச் சொல்லியனுப்புங்கள். முறையே அழைப்பும் வரவேற்பும் வந்துசேரும் சென்றுவாருங்கள். அதுவரை நான் இங்கேயே இருக்கிறேன்.

(இருவரும் செல்கின்றனர். புனிதாவின் உள்ளம் விரைந்து சென்று பாசறையில் நிலவுகிறது.)

புனி: (தனக்குள்) அத்தான்! தங்கள் அன்பிற்கினியாள் இன்பமொழி கேட்க ஆவலாய் வருகிருள் மறுத்துவெறுத்தொதுக்க மாட்டீர்களே! மகிழ்வாக வாழ்ந்த இத்தனை நாட்களிலும் இன்றே இன்பம் தனித்தாளும் நாள் என்றெண்ணிப் பூரிக்கிறேன் அத்தான்.

(பாசறையை அடைகின்றனர்.)

(தொடரும்)

(இலக்கியம்)

முதற்போர்

இரா. செழியன்

போர்க்களம்!

தேர்கள் அசைந்தன! யானைகள் தாக்கின! குதிரைப் படைகள் தாவிச் சென்றன! வீரர்கள் சுழன்று வந்தனர்!

ஆவேசமானப் போர்! தேர்கள் மோதின! யானைகள் கதறின, தந்தங்கள் நொறுங்கின! குதிரைகள் புரண்டு விழுந்தன! வாட்கள் மின்னின, கேடயங்கள் ஒலித்தன, வீரம் தெறித்தது! இரு படைவரிசைகளும் தமது முழு பலத்தையும் பணயமாகவைத்துப் போராடின!

பாண்டிய நாட்டை வளைத்துக்கொண்ட பகைவர் கூட்டம் ஒருபுறம், தாயகத்தைக் காக்கவந்த மறவர் அணி மற்றோர் புறம்! தேக்கி வைத்திருந்த பலத்தையெல்லாம் அவிழ்த்து விட்டனர் பகைவர், அதைத் தாங்கிநின்றனர் தென்பாண்டி மறவர்! "எடு! பிடி! அடி! குத்து!" என்று வீரக்குரல்கள் ஒலித்தன, வேலும் வில்லும் வாளும் அம்பும் சிதறி எழுந்தன, விழுந்தன பகைவருடன்!

பகைவர்கள் போர்முறைகளில் கைதேர்ந்தவர்களாயிருந்தனர், களம் பல கண்டவர்கள், படைபலம் மிக்கவர்கள்!

சூழ்ச்சியில், வஞ்சகத்தில், எவரையும் மிஞ்சுபவர்களாயிருந்தனர்! எப்படியும் வெற்றி பெற்றுகவேண்டும் என்ற வெறித்தன்மையில், போரில் எல்லாவித இழிசெயல்களையும் அவர்கள் கையாளத் தயாராகயிருந்தனர்! ஏராளமான கூலிப்படைகள், தேர் வாகனவசதிகள், அவர்களிடம் குவிந்து கிடந்தன! பகைவர்கள் பலர், அவர்களிடமிருந்த படைகள் அதிகம், இருந்தாலும் தாக்கப்பட்ட படை எதிர்த்து நின்றது, சிறிதும் விட்டுக்கொடுக்காமல் போராடியது!

போராட்டத்தைத் தாங்கிக் கொண்டிருந்த, தாயகத்துக்காகப் போராடிய படையமைப்பில் ஒரு புலவரும் இருந்தார்! எழுத்தாணியும் கையுமாக இருக்கவேண்டியவர், வாளுங் கையுமாகக் காட்சியளித்தார்! தாய் நாட்டுமீது பகைவர் படையெடுத்து வந்தபொழுது, தமிழ்ப் பாட்டு எழுதிக் கொண்டிருந்தால் மட்டும் போதுமா? எனவே, முரசு முழங்கி வீரர்களைத் திரட்டியபொழுது, அந்தப் புலவர் எழுதும் ஓலையை ஒருபுறம் மூடிவைத்து, வேலையும் வாளையும் தாங்கிக்கொண்டு, படையில் நுழைந்தார், போர்க்களம் வந்தார்.

அந்தப் புலவரின் பெயர், இடைக் குன்றூர் கிழார்! இடைக்குன்றூர் என்ற சிற்றூரில் முக்கியமானவராக - தலைவராக இருந்த அவர், புலவராகி, சிற்றூரை விட்டு, அரசன் தலைநகரில் வந்து, செந்தமிழ் நாட்டுக்கு-செந்தமிழ் இலக்கியத்துக்கு கவிதைச் செல்வத்தை நாள்தோறும் வழங்கிக் கொண்டிருந்தார்! போர் மூண்டதும் தனது சிற்றூருக்கு ஓடிப் போகாமல், அமர்க்களத்துக்கும் சென்றார்!

இடைக்குன்றூர் கிழார் இப்பொழுது படை வீரர், முதலில் புலவர்! போர்க்களத்தில் கூட அவரது புலமை, கற்பனை, கவிதையுள்ளம் மறையவில்லை! அவரது கை வாளைச் சுழற்றிக் கொண்டிருந்த போதிலும், கண்கள் சுழன்று கொண்டிருந்தன, புதுமையைத் தேடி! அந்தப் பயம் நிறைந்த போர்க்களத்தில், ஒரு ஆச்சரியம், ஒரு புதுமை அந்தப் புலவருக்குக் கிடைக்காமற் போகவில்லை.

புலவர் இடைக்குன்றூர் கிழாரும் அவரைச் சேர்ந்த தாய்நாட்டு வீரர்களும் போராடிக் கொண்டிருக்கும் படையமைப்பில், ஒரு சிறுவனும் போரில் கலந்துகொண்டு, எதிரிகளை மடக்கிக் கொண்டிருந்தான். களம் பல கண்ட வீரர்களும், வெற்றி விருது பலமுறை பெற்ற தீரர்களும் கண் கலங்கும்படி இருக்கும் போர்க்களத்தில் ஒரு சிறுவன் இருப்பது, புலவருக்கு

ஆச்சரியத்தைக்கொடுத்தது. சிறுவன் — சிறு வயதினன் பால்வடியும் முகம் என்பார்களே, அந்த பசும் இளமை-குழையும் முகம் இன்னும் மாறவில்லை. இருந்தாலும் அந்தப் போர் முகத்தில், பயம் நிறைந்த சண்டையின் நடுவில் நிற்கிறான்.

அந்தச் சிறுவன் காலில் வீரக்கழல் போடப் பட்டிருக்கிறது. ஆயினும் அது அவனுக்குப் புதிது என்பது நன்றாகத் தெரிகிறது. இன்று வரைச் சதங்கை பூட்டிய காலாக இருந்திருக்கும், போருக்குப் புறப்படுவதாக யாரோ அந்தச் சதங்கைகளை எடுத்துவிட்டு, வீரக்கழல் களைப் பூட்டி அனுப்பியிருக்கிறார்கள்.

இன்றுக்காலைவரை அவனது சென்னியில், மலர் சூட்டிப் பலர் மகிழ்ந்திருப்பார்கள்; இன்றுதான் போருக்கு அறிகுறியான மாலை முதன்முறையாகச் சூட்டப்பட்டிருக்கிறது.

நேற்றுவரை அவன் கைகளில் வளைகள் இருந்தன. ஆசையுடன் பெற்றோரும் உற்றோரும் அவனுக்கிட்ட வளைகள்! ஓடியாடும் பொழுது கைவளைகள் ஒன்றோடொன்று, இனிய சத்தத்தை உண்டாக்கியிருக்கும். ஆனால் இன்று அந்த வளைகள் நீக்கப்பட்டு, வளைச்சத்தம் ஒழிந்து, அந்தக் கைகளில் வில்லும் அம்பும் ஒலி செய்கின்றன. வளை யொழிந்த கரத்தில் வளைந்த வில்!

சிறிய தேர்களை இழுத்து விளையாடிக்கொண்டிருந்த சிறுவன், இப்பொழுது பெரிய தேரில் நின்றுகொண்டு போர்முழக்கம் செய்கிறான்! பெரிய தேரில் இளமை மிகுந்த அவன் நிற்பதுகூட, தேர்வீரன் நிற்பது போலில்லை. தேரில் அலங்கரிக்கப்பட்ட சிறிய மொட்டுப் போல, அலங்காரப் பதுமைபோல இருக்கிறது.

தோற்றத்தில் இளம் வயதினன், முதன் முறையாகப் போருக்கு வந்துள்ளான்; இன்றுதான் பாலை நீக்கிச் சோறுண்டானே என்று கூறவேண்டியிருக்கிறது, இன்றுதான் சிறுவர்களுக்குப் போடும் ஐம்படை என்ற அணியை நீக்கி, போர் மாலையை மார்பில் பூட்டி வந்தானே என்று சொல்லவேண்டியிருக்கிறது.

போர் புரிவதற்கான வயதும் இல்லை, பார்த்தால் வலிவும் இல்லை என்றுதான் முதலில் படும். அவனைப் பார்த்ததும், போர் முகத்தில் அந்தச் சிறுவனைக் கண்டதும் "சிறு தேரை இழுத்துத் திரியவேண்டியவன் பெரிய தேரில் வந்துள்ளானே? சதங்கை கொஞ்சவேண்டிய காலில் வீரக்கழலும், மணமலர் இருக்கவேண்டிய தலையில் வெற்றி மாலையும் வளை ஒலிக்க வேண்டிய கரத்தில் வில்லும், அழகு அணிகள் இருக்கவேண்டிய சிறுமார்பில் போர் மாலையும் இருக்கின்றனவே? இந்த அறியாச் சிறுவன், அமர்க்களத்துக்கு ஆகாப் பருவத்தினன் இங்கு ஏன் வந்தான்? இவன் யாரோ?" என்று புலவர் எண்ணினார். அவருடன் இருந்த மற்ற வீரர்களும் அப்படித்தான் நினைத்தார்கள்.

தோற்றமோ கழியாத இளமை, போருக்கு முதல்தடவை! அந்த இளைஞனைப் பார்த்தவர்கள் பரிதாபப்பட்டனர். எதிரிகள் எள்ளி நகையாடி வந்தனர்! ஆனால்......

பார்ப்பதற்கு எளிமையாக, இளமையாகத் தோற்றமளித்தானேயொழிய, போர் அவனைச் சூழ்ந்ததும், எதிரிகள் நாலாபக்கத்திலும் நெருங்கித் தாக்க ஆரம்பித்ததும், அவன் வீரனைக் காட்சியளித்தான். வீரனுக்கு வீரனாக மறவனுக்கு மறவனாக அவன் போராடினான். சிரித்து வந்தவர்களில் பலர் சிவந்த மண்ணில் விழுந்துகிடந்தனர்; துள்ளிவந்த வீரர்களில் சிலர் தூக்கி எறியப்பட்டனர்.

சிறுவனா? அல்ல, சிறுத்தையின் குட்டி! சீறிவந்த வேங்கை!

யார் அந்தச் சிறுவன்? போர்க்களத்தில் எல்லோரும் கேட்டனர். முன்போல ஏளனத்துடன் அல்ல, பயத்துடன், மதிப்புடன்!

"அவன்தான் இளவரசன்"

"அப்படியா!" ஆரவாரம் வந்தது.

"இந்த நாட்டின் எதிர்கால அரசன், இந்த நாட்டை ஆளவேண்டியவன், ஆளப்போகிறவன்."

"வாழ்க, வாழ்க!" என்று வாழ்த்தொலி கிளம்பியது.

இளைஞன் முகத்தில் மகிழ்ச்சியோ சோர்வோ எதுவுமில்லை. முதலில் அவனை ஏளனத்துடன் மற்றவர்கள் பார்த்தபொழுது அவன் சோர்வடையவில்லை. இவ்வளவு செய்தோமே என்று அவன் பெருமிதம் அடையவில்லை. இரண்டு நிலைகளிலும் அவன் மன வுறுதி மாறாமல் இருந்தது.

புலவர் மகிழ்ச்சியில் கூத்தாடினார், வாழ்த்தினார், அவருடைய வாழ்த்து-புலவர் வாழ்த்து எப்படியிருந்திருக்கும்? அதிலும் சங்ககாலத் தமிழ்ப்புலவர்! அவருடைய வாழ்த்து, ஒரு பாட்டாக—செந்தமிழ்ப் பாடலாக மலர்ந்தது. புலவர் இடைக்குன்றூர் கிழார் பாடிய அந்தப் பாடல் புறநானூற்றில் இருக்கிறது.

கிண்கிணி களைந்தகால் ஒண்கழல் தொட்டுக்
குடுமி களைந்தநுதல் வேம்பின் ஒண்தளிர்
நெடுங்கொடி யுழிஞைப் பவரொடு மிலைந்து
குறுந்தொடி கழித்தகைச் சாபம் பற்றி
நெடுந்தேர்க் கொடுஞ்சி பொலிய நின்றோன்
யார்கொல் வாழ்க அவன் கண்ணி தார்பூண்டு
தாலி களைந்தன்று மிலனே பால்விட்டு
அயினியு மின்றயின் றனனே வயின்வயின்
உடன்றுமேல் வந்த வம்ப மள்ளரை
வியந்தன்று மிழிந்தன்று மிலனே அவரை
அழுந்தப் பற்றி அகல்விசும் பார்ப்பெழக்
கவிழ்ந்துநிலஞ் சேர அட்டதை
மகிழ்ந்தன்று மலிந்தன்றும் அதனினு மிலனே.

(கிண்கிணி-சதங்கை, கழல்-வீரக்கழல், நுதல்-சென்னி (தலை) உழிஞை-ஒருவகைக்கொடி. பாண்டிய நாட்டார் போருக்குச் செல்லும்பொழுது, வேப்பமலருடன் உழிஞைக்கொடியையும் சுற்றித் தலையில் அணிந்து செல்லுதல் வழக்கம்.

தாலி-ஐம்படைத்தாலி, சிறுவர்களுக்கு அணியும் ஒருவகை அணி.

வயின்-முறையாக, வம்ப மள்ளரை-புதிய வீரரை,):

"சதங்கை எடுக்கப்பட்ட காலிலே ஒளி பொருந்திய வீரக்கழலைப் பூட்டி, சிறுவர்களுக்கான மயிர்வரிசை மாற்றப்பட்ட தலையில் வேம்பினது மெலிந்த தளிரை உழிஞைக் கொடியுடன் சேர்த்துக்கட்டி, சிறிய வளைகள் நீக்கப்பட்ட கையில் வில்லைத் தந்து, உயர்ந்த தேரினது அழகு விளங்க நின்றவன் யாரோ தான்? யாரேயாயினும் அவன் மாலை வாழ்வதாக! இன்றுதான் ஐம்படைத் தாலியை ஒழித்து மாலை அணிந்தான், பாலை ஒழித்துச் சோறுணவு உண்டான், இருப்பினும் முறை முறையாக வெகுண்டு வந்த புதிய வீரர்களை மதிக்கவும் இல்லை, அவமதிக்கவும் இல்லை, அவர்களை இறுகச் சேர்த்து, பரந்த வானில் ஒலியெழத்தள்ளி உடல் நிலத்தில் சோர அழித்தான், அதற்கு மகிழ்ச்சியடையவும் இல்லை, இவ்வாறு செய்தோமேயென்று பெருமிதம் அடையவும் இல்லை."

போர் முகத்தை அதற்குமுன் காணாத இளைஞன்—பால்மணம் மாறாத வதனத்தினன்—அவன் தான் புகுந்த முதற்போரிலே வீரத்தைக் காட்டினான்; வீரம் மிகுந்திருந்த நேரத்தில், அமைதியும் அடக்கமும் மிகுந்திருந்தன. அவ்வாறு முதற்போரிலே வீரம் விளைத்த இளைஞனை புலவர் இடைக்குன்றூர்கிழார், "யார் கொல்!" என வியந்து, பின் யாராயிருந்தாலும் "வாழ்க அவன் கண்ணி!" என வாயார வாழ்த்துகிறார். கண்ணி என்பது தலையில் சூடும் அடையாளப் பூ. பண்டைக் காலத்தில், ஒருவனை நேரிடையாக வாழ்த்துவதற்குப்பதில், அவனுடைய கண்ணி, குடை, வாள், வேல், இவற்றைப் புகழ்ந்து, வாழ்க என்று வாழ்த்துவதுண்டு! அந்த வகையில், வீர இளைஞனை வாழ்த்தும்பொழுது, "வாழ்க அவன் கண்ணி!" என வாழ்த்துகிறார்.

இந்தப் பாடலில் "தாலி களைந்தன்று மிலனே" என்ற அடியில் வருகிற "தாலி" என்ற சொல்பற்றி பலருக்கு ஐயம் தோன்றலாம். ஏனென்றால், சின்னாட்களுக்கு முன்பு "தாலி" என்பதுபற்றி பலத்த ஆராய்ச்சிகள் எழுந்தன. இதில் வருகிற "தாலி" என்பது சிறுவர்களுக்கு அணியப்படும் ஒருவகை அணியாகப் பண்டைக் காலவழக்கத்தில் இருந்திருக்கிறது, அதுவே ஐம்படைத் தாலி எனவும் வழங்கப்பட்டது. பிள்ளை பிறந்த ஐந்தாம் நாளன்று 'இந்த ஐம்படைத்தாலி அணிவித்

தார்கள் என்ற குறிப்பு இருக்கிறது. சிறுவர்களுக்குத் தாலி என்ற அணியைப் போட்டார்கள் என்பது இந்தப் புறநானூறு பாடலிலன்றி, அகநானூறு பாடல் ஒன்றிலும் வருகிறது. "பொன்னுடைத் தாலி என்மகன்" என்று அகநானூறு 54-ம் பாடலில் ஒரு அடியில் வருகிறது. "பொன்னால் ஆன தாலி என்ற அணியையுடைய என் மகன்" என்று அதறகுப் பொருள். ஆகத் தாலி என்பது சிறுவர்களுக்குப் பூணப்பட்ட அணிவகைகளில் ஒன்று என்பது மட்டும் இந்தப் பாடலிலிருந்து தெரிய வருகிறது.

இடைக் குன்றூர் கிழார் பெரும் புலவராக இருந்திருக்க வேண்டும். பாடலின் எளிமையும், உயர்வும், சொற்செட்டும், கருத்துத் தெளிவும் அவரது ஆழ்ந்த புலமையை வெளிப்படுத்துகின்றன. ஆனால் பாடிய பாடல்களுள் நான்கு பாடல்கள் தாம் நமக்குக் கிடைத்துள்ளன. அவை புறநானூற்றில் இருக்கின்றன.

இடைக்குன்றூர் கிழார் பாடிய பாடலைப் பார்க்கும் பொழுது பண்டைக் காலத்திய தமிழ்நாட்டு நிலைமட்டுமல்ல, இப்பொழுதுள்ள தமிழ்நாட்டு நிலைகூட நம் கண்முன் வருகிறது. தேர்தல் அமளியில் இருந்த நமக்கு, இந்தப் பாடலைப் படிக்கும்பொழுது, நமக்குக்கூட இந்தப்பாடல் ஒத்துவரும்போல் இருக்கிறது.

இளைஞன்-முதல் தடவையாகப் போர்க்களத்தில் புகுந்தான்.

திராவிட முன்னேற்றக் கழகம் அரசியல் உலகின் வயதுக் கணக்குப்படி இளைய கட்சி—தேர்தல் முதலிய "பெருங்" காரியங்களுக்கு வயது (ஆற்றல்) நிறம்பாத ஒன்று என்று எண்ணப்பட்ட கட்சி! அது முதல் தடவையாக தேர்தல் போர்க் களத்தில் நுழைந்தது.

தேர்தல் களம் திராவிடமுன்னேற்றக் கழகமாகிய இளைஞனுக்கு புதிது! அந்த இளைஞனுக்கு-சிறுவனுக்கு வயது ஒன்பதுதான், பாடலில் வருகிறதே அதைப்போல சிறு பிராயம் நீங்கி, வலிவான வயது, தேர்தலுக்கான வலிவும், நிறைவும் பெருத நிலை! எதிர்த்து நின்ற மாற்றுப் படையினரோ, ஆண்டுக்கணக்கில் பெரியவர்கள்! இந்த இளைஞன் முதல் தடவையாகத் தேர்தல் களத்தில் புகுந்தான், தாயகத்தைக் காக்க வேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன்! களத்தில் அவனை எதிர்த்து நிற்பவர்களுக்கு களத்தின் அனுபவம் மிக்கவர்கள்! வெற்றிபெற்றாக வேண்டும் என்ற வெறி நோக்குடன், எந்த குற்றத்தையும் சூழ்ச்சியையும் செய்யத் தயாராக இருந்தார்கள்! களம் பல கண்டவர்கள், வெற்றி விருதுபல பெற்றவர்கள், படைபலம் மிக்கவர்கள், அந்தக் காலத்தில் தேர்ப்படை இருந்ததென்றால், இந்தக் காலத்தில் கார்ப்படை இருக்கிறது! அத்தகைய களத்தில் சூழ்ச்சியும் அனுபவமும் மிக்க எதிரிகளின் சேமிக்கப்பட்ட எதிர்ப்பை, இளைஞன்-முதல் தடவையாக தேர்தல் களத்தில் புகுந்த திராவிடமுன்னேற்றக் கழகமாகிய இளைஞன் எதிர்த்து நின்றான்! அன்றுபோல இன்றும், இவனைப் பார்த்து எள்ளி நகையாடினர் எதிரிகள்! "ஆற்றுவானோ நமக்குமுன்?" என ஆரவாரித்தனர் பலர்! "அழித்துவிட்டுதான் மறு வேலை!" என ஆர்ப்பரித்தனர் சிலர்!

இளைஞன் ஏளனத்தைக் கண்டு மனம் சோரவில்லை! தாயகத்தைக் காக்கத் தனது கடமையைச் செய்தான்! அணி அணியாக வந்த எதிரிகளை எதிர்த்து நின்றான், நான்கு புறத்தும் சூழ்ந்து அடித்தப் பகைப் பலத்தை தாங்கி நின்றான், அதற்கு ஈடுகொடுத்தான்!

இளைஞனின் செயல்-வீரப்போராட்டம் பலருக்கு ஆச்சரியத்தைத் தந்தது! "யார் இவன்?" எனப் புலவர்கள் கேட்டனர். திராவிட முன்னேற்றக்கழகம் ஆற்றிய செயல் பலருக்கு ஆச்சரியத்தைத் தந்துள்ளது. "இந்திய நாட்டுத் துணை மந்திரிகள் இருவர் சாய்ந்தனராமே! இந்தியாவின் நிதி மந்திரிகூட விழ இருந்தாரே! யார் இவர்கள்?" என்று புலமையாளர்கள் கேட்கிறார்கள்!

"வாழ்க'" என்று செந்தமிழ்ப் புலவர் பாடினார், "வாழ்க" என்று செந்தமிழ்நாட்டார் வாழ்த்துகின்றனர்!

ஏளனத்தின் போதும், புகழ்ச்சியின் அமைதியைக் கைவிடாத இளவீரனைப்போல, திராவிடமுன்னேற்றக்கழகம் அமைதியுடன், அடக்கத்துடன் இருக்கிறது!

"தாயகத்துக்காகப் போராடும் அந்த இளைஞன் வேறுயாருமில்லை; இந்த நாட்டை ஆள வேண்டியவன், ஆளப்போகிறவன்!" என்று பார்த்தோர் பதில் தந்தனர், புலவர் மகிழ்ந்தனர்.

"தாயகத்துக்காகப் போராடும் அந்த இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம்தான் இந்த நாட்டின் சொந்தக் கட்சி, இந்த நாட்டை ஆள வேண்டிய ஆளப்போகிற கட்சி!" என்று நாமும் கூறுகிறோம். நாடு செழிக்க நல்லவர் மனமகிழ, அத்தகைய நல்ல நாளில் வாழ்த்துரை வழங்க, எதிர்காலம் காத்திருக்கிறது! திராவிடத்துக்கும், நமக்கும் வாழ்த்துகூறும் நல்ல எதிர்காலம் வரத்தான் போகிறது! ஏளனங் கண்டு சோர்வடையாமல், புகழ்ச்சி கேட்டு செருக்கு அடையாமல் காத்திருப்போமாக!



பாலைவனம்

(தம்பி)

அவன் பலமுறை கேட்டிருக்கிறான், 'வாழ்க்கை பாலை வனமாகிவிட்டது' என்று கூறுவதை! அப்போதெல்லாம் அது வெறுஞ் சொற்களாகவே அவன் கருத்திற்பட்டு வந்தது. மக்கள் மனோநிலையின் தன்மையே அது தானே! அதில் அவன் மட்டும் எப்படி விதி விலக்காகமுடியும்? ஆனால் பாலைவனம் என்பதை கற்பனைகூட செய்து பார்க்கவேண்டிய நிலையும் நியதியும் அவனுக்கு ஏற்பட்டதில்லை- அன்று ஏற்பட்டது. பாலை வனத்துப் பரந்த வெளி-நள்ளிருள்—இருளிலே சிறிது ஒளியிருக்குமென்பார்கள். அதுவும் கிடையாது. இரவிலே அமைதி இருக்கும் என்று கூடச் சொல்வதுண்டு—அவனுக்கோ அந்த இரா அலை மோதும் நெருப்பாறாக இருந்தது. இந்தப்பாலை வனம், நெருப்பாறு, வெடிக்கும் மலை, ஈட்டி போல் பாயும் வாடைக்காற்று இவையெல்லா மெங்கே! சகாராவிலோ அல்லது அதுபோன்ற வருணனைக்கு இலக்கான வேறு இடங்களிலோ சென்று அவன் காணவில்லை. சிறுவீடு. ஏழையின் வீட்டில் இயற்கை வெளிச்சங்கள் எளிதாகப் புக எண்ணற்ற வழிகளுண்டு என்பார்களே, அந்த வழிகளையும் ஒட்டடைப் பூச்சி பழமை கெடாமல் தனதாக்கிக் கொண்டிருந்தது. விளக்கு ஏற்றப்படவில்லை. அவன் உறங்கி விடவில்லை என்பதற்கோர் அறிகுறியாக அவன் வாயிலிருந்து வெளிவந்த "இருள் சூழ்ந்த வீடு, இதுதானெந்தன் வாழ்வு" என்னும் சொற்கள் நிரூபித்துக்கொண்டிருந்தன. ஒரு வேளை ஆழ்ந்த உறக்கத்தில் பிதற்றுகிறானோ என்ற ஐயமுமில்லை! இன்றுடன் மூன்று நாட்களாகின்றது அவன் அந்த நிலையை அடைந்து. மூன்று நாட்களிலும் அவன் கண்கள் கடந்த எட்டு ஆண்டுகளைக் கண்டுகொண்டிருந்தது. அவற்றில் எத்துணை பொருள்கள் பொதிந்து கிடந்ததென்பது கூர்ந்து காண்போர் அறியாதிருக்கமுடியாது. அல்லாமலும் அவன் வாய் தனக்குத்தானே முணு முணுத்துக்கொண்டது:—

"உலகமே இருண்டுவிட்டதென்பதை இப்போதுதான் உணர்கிறேன். இதயத்தின் எல்லையற்ற பெரு வெளியில் முழுவதும் உன் உருவந்தான் நிறைந்திருக்கிறது. இதே உருவத்தைப் பலமுறை கண்டுகளித்திருக்கிறேன். ஆனால் இப்போது......"

இவ்வாறேகூறி எண்ணமிட்ட வண்ணமிருந்தான்.

இத்தகைய குறிப்புக்கு இலக்காகி இருப்பவன் ஒரு அறிஞனோ! அல்ல அல்ல. பணத்திலே படுத்துப் புரளும் தன்மையனாயிருந்து இந்த நிலை எய்தினானோ! கிடையாது. அவனோர் பஞ்சை-பராரி-பட்டதாரியல்ல...படிப்பை நுகர்ந்தறியாத முட்டாள். எனினும் பரந்த உலகமெனும் பல்கலை மன்றிலே, பட்டம்பெறப் படித்தாலும் பெறமுடியாத அளவு அனுபவத்தால் கற்றறிந்திருந்தான். அதற்காக அவனை அவனே வியந்து கொள்வதுண்டு பல தடவைகளில். இப்படித் தன் முயற்சியுடன் வாழ்ந்து உயர்ந்துவந்த அவனை வையம் ஒருபோதும் ஏற்றுக்கொண்டது கிடையாது. அவனும் வையம் தன்னை ஏற்றுக் கொள்ளவில்லையே என்றெண்ணித் துவண்டதும் கிடையாது. தற்போதைய அவன்நிலை இதுபோன்ற சூழல்களின் பெரும் பள்ளத்திலிருந்து வெளியேறி வந்தவன் என்று கூறத்தகுந்த தன்மையதாயிருந்தது. எண்ணிப்பாராது எதையும் செய்து கொண்டிருந்தவன் நுண்ணிதாக ஆராய்ந்து சிறு காரியமாயினும் செய்யக் கூடியவனானான். அப்படியே ஒவ்வோர் வகையிலும் முன்னேற்றத்தின் இலக்கை நோக்கிச் செல்பவனாகஇருந்தான் அவன். வாழ்க்கையை சந்திக்கும் வாய்ப்பு அவனுக்கு ஏற்பட்டுவிட்ட போது தனது கடந்த காலங்களைக் கருதி நடக்கலானான். அப்படி அவன் கருதியபோது, பெருவாரியாக அவன் கண்ணிற் பட்டதும் எண்ணத்துள் நிறைந்ததுமாகத் தோற்றியது ஏமாற்றம், ஏமாற்றம், ஏமாற்றம் என்பது தான்.

இவை அவனைப் பலமுறை உள்ளூரத் தாக்கிக் கொண்டிருந்தபோதும், அவற்றையெல்லாம் ஒருசேரச் சிந்தித்துப் பார்க்குமொரு சந்தர்ப்பம் நேரவில்லை. அந்த சந்தர்ப்பம் இப்போது வந்துற்றது. அதன் விளைவின் ஒரு கூறு, 'உலகமே இருண்டுவிட்டது' என்ற

முடிவு. அயர்ந்து படுத்திருந்தான். கண்கள் மூடவில்லை. திறந்தபடிதான் இருந்தன. உடலின் உணர்ச்சியோ ஊறோ அவனைத்தாக்கவில்லை. அடிக்கடி பெருமூச்செறிந்தவாறு இருண்டதாக அவன் கருதிவிட்ட சூழலின் நடுவே, நிழற்படம்போல் தோற்றிக் கொண்டிருந்த காட்சிகளைக் கண்டவண்ணமிருந்தான்.

'வீனஸ்' அப்படி அவன் வாய் ஒருமுறை அழைத்தது. உலகப் பேரழகி, ரோமர்களின் அழகுத் தெய்வமென்றும் கூறப்படுபவளுக்கு அப்படி ஒரு பெயர். அவனுக்குத் தெய்வ நம்பிக்கையோ அல்லது தான்குறிப்பிடும் பொருள் தெய்வத் தன்மை பொருந்திய தென்ற எண்ணமோ அவனுக்குக் கிடையாது. எனினும் தன் சிந்தை உடல் அணு ஒவ்வொன்றும் நிறைந்த ஒயிலாளுக்கு அந்தப் பெயரிட்டு அழைப்பதிலே தனிப்பெருவகை கொண்டான். அந்த அழைப்பில் உள்ளம் மகிழ்ந்த அவன் இன்று உள்ளம்நைந்தான். தற்போதுற்ற நிலையை வைத்துப் பின் நோக்கினான். கடந்துவந்த காலங்களும் காலங்களின் வகை, தொகை நடைமுறைகளும் தென்பட்டன.

ஒருசமயம்: அவனைக் கண்டு ஊராரே நடுநடுங்கினர். தன்வரையில் அவன் எவ்வளவோ நேர்மையும் நல்ல தன்மையும் உடையவனாகவே இருந்தான். ஆனால் ஊர் அவனைக் கொடியவன், முரடன், எதற்கும் அஞ்சாத இரும்பு இதயம் கொண்டவனென்றெல்லாம் கூறித் தானும் அஞ்சிப் பிறரையும் அஞ்சச் செய்தது. அதனின்றும் விலகி எல்லோரும் தன்னை வரவேற்கத்தக்க வாழ்க்கையை அவன் விரும்பினான் முயற்சித்தான்-பெற்றான்-பெற்றதாக எண்ணிக்கொண்டான். அவ்விதம் அவன் வாழ்க்கையை மாற்றிக் கொண்டபோது சமுதாயத்தின் போக்கு அவனைப் 'பழைய வழிக்கே செல்' என்று துரத்தியதுண்டு. எனினும் நிலைபிறழாது நிலைத்து நிற்கவே முயற்சி செய்துவந்தான். இவற்றின் நடுவே காதலின் வேகம் அவனைத் தாக்கியதுண்டு. அவ்வேளைகளில் "எல்லோரும் வெறுக்கும் தன்னையும் ஒருத்தி காதலிக்கிறாளே" என அவன் பாராட்டி ஏற்றுக் கொண்டதில்லை. மாறாக, மறுத்தும் வெறுத்தும் நீக்கி வந்தான். அதற்குக்காரணம் அவன் முற்றும் துறந்த முனிவனாக விரும்பியோ, அல்லது தான் வாழமுடியாதென்று அஞ்சியோ அல்ல. காதல் ஏற்படுவதன் காரணம் காணவிரும்பினான். அதனால் தன்னைக் காதலிப்பதாகச் சொல்லும் காதலிகளிடமே "நீ ஏன் என்னைக் காதலிக்கிறாய்" என்று கேட்டான். அவர்கள் கூறும் மறுமொழிகளெல்லாம் ஏதோ ஒரு பெருமைக்குரிய வற்றைச் சார்ந்ததாக இருப்பது தெரிந்து, அந்தப் பெருமையை மிஞ்சிய மற்றொருவன் எதிர்ப்பட்டால் காதல் மாற்றம் பெறுமோ-அல்லது ஏமாற்றமாமோ என்று கேட்டு அனுப்பி விட்டான். இத்தகைய அவன் கேள்விகளில் எந்தவித நுண்பொருளும் அடங்கி இருக்கவில்லையாயினும் தன்வரையில் ஒரு பொருள்கூறியும்-அதையே விடாப்பிடியாகம் கொண்டும் வாழ்க்கைப் பாதையைக் கடந்து வந்தான். "எந்தப் பெண்தான் இதற்குப் பதில் கூறமுடியும்? வேண்டாவெறுப்புக்காக இவ்வாறு கூறுவது முறையாகுமா" என்றே அவனிடம் பலர் கேட்டனர். அதற்கவன் கூறினான்:—

"காதலின் தொடக்கத்திற்குக் காரணமாய் இருப்பவர்கள் பெண்கள். ஒரு பெண் முயன்று ஒரு ஆடவனை அடுத்து விடமுடியும்; அதே போல அவர்கள் செயல் முறைகளை ஒப்பவே ஒரு ஆடவன் பெண்ணை அடுக்கமுடியாது. ஆக, ஒருபெண் வலியவந்து தன்னைக் காதலிப்பதாக எந்த முறையில் அறிவித்தாலும் ஆடவன் உடனே ஏற்றுக் கொள்கிறான்-காதலை ஏற்படுத்திக்கொள்கிறான். ஏனிவ்வாறெனில் காதல் என்னும் அந்தச் சொல்லுக்குப் பெண்தான் கருப்பொருளாயிருக்கின்றாள் இவன் உருப்பொருளாக இருக்கிறான். எனவே கருவாகும் ஒன்று காரணமுள்ளதாக இருக்க வேண்டாமா? காதலிக்கிறேன் என்று ஒருத்தி கூறியதும், நானும் காதலிக்கிறேனென்று ஆடவன் கூறுகின்றானேயல்லாமல் ஏன், எதற்காக என்று சிந்திப்பதில்லை. அவள் காதலிக்குமுன் பலமுறை அவனை—அவன் போக்கை-நடைமுறை ஆகியவைகளைப் பல தடவை பல வேறு கோணங்களிலிருந்து காண்கிறாள் - கருதுகிறாள் - தன் கருத்தை வெளியிடுகிறாள். இவனோ அவளது முயற்சியைப்போன்றோ அதிலொரு சிறுபகுதியோ கூடத் தன்வரையில் செயலாற்றியிருப்பது கிடையாது. என்றாலும் காதலிக்கிறேன்றால் உடனே ஒத்துக்கொள்ளுகிறான். அல்லாமலும் அந்தக் காதலைப் பலரிடம் கூறி உறுதியும் செய்து கொள்ளுகிறான், இவற்றுக் கிடையில் அதன் தன்மை, மென்மை மேன்மைகளைப் புகழ்வானேயல்லாமல் புரிந்துகொள்வதில்லை. ஆனால் புரிந்து கொண்டதாக நடித்துக் கொண்டிருப்பான. அதனாலே தான் காதல் சிதைவதும் சீர்கெடுவதும். இவைகளை நான் உணர்ந்து கொண்டேன்-ஆகவே காதலுக்குக்

காரணம் கேட்கிறேன் என்று கூறிவந்தான். இதன் பயனால் என்றென்றைக்குமே அவனுக்குக் காதலோ கல்யாணமோ கிடையாதென்றும் கிடைக்கமுடியாதென்றும் கூறினர். அவன் அதை எல்லாம் பொருட்படுத்தவில்லை. வழிநடந்து விட்டான். பிறர் கூறியவைதான் தன் வாழ்நாளின் தீர்ப்பு என்று கருதிவிட்டான். பின்னர் தன் வாழ்விலும் ஒருமாற்றம் ஏற்பட்டு விட்டது என்று கூறுகின்ற அளவுக்குக்காதலைக் கைமேற்றான். இப்போதும் தன் கருத்துக்குப் புறம்பாகக் காதல் கொள்ளவில்லை. எத்தனையோ சோதனைகள்-கேள்விகள்-இவற்றின் பிறகே காதல் உண்டென்று கொண்டான். அதை அடிக்கொருமுறை நினைத்துப்பார்ப்பதிலேயே அவனுக்கொரு தனி இன்பம்.

நாகரிகம் வளர்ந்து முற்றி விட்டகாலத்தே தான் காதலைக் கைக்கொண்டானெனினும் நாகரிக முதிர்ச்சியின் சாயலில் கூட நிற்க அவனால் இயலவில்லை. அவளும் அதனைக் கருதவில்லை. உள்ளத்தால் ஒன்றுபட இருந்தமைக்கு உறுதுணையாக இருந்த காரணங்களை எண்ணி இருவரும் உள்ளம் மகிழ்ந்து வந்தனர். காதல் தொடக்கமே ஒரு தனித்தன்மையதாக இருந்தது. கண்டாள்-கண்டான்-காதலராயினர் என்கின்ற நிலையில்லை. கருத்துக்கொடுத்து உள்ளத்தைப் பெறுவதற்கே பல மாதங்கள் கடந்து சென்றன. இதன் தொடக்கம்:—

புத்தகமொன்று கேட்டு வாங்கிப் படிக்க வேண்டிய நிலைமை வந்தது. அதன் விளைவாக நேர்ந்த நிகழ்ச்சி, புத்தகத்தினுள் ஒரு படத்தின் பக்கத்தில் "உள்ளம் காதலிலே இப்படி" என்று படத்தின் தன்மையை இலக்காக வைத்து எழுதப்பட்டிருந்தது. அதன் பக்கத்திலேயே அவன் "எப்படி" என்றெழுதியனுப்பினான். இதில் இருவர் நோக்கமும் ஒரேமாதிரியாக இருந்தபோதிலும் ஒருவரை ஒருவர் மிஞ்சுகின்றனர். அதாவது, ஏதோ பார்த்தது போல் பார்த்து நம் கருத்தின் தன்மை உணர்ந்து கொள்ளட்டுமே என்று அவளும், ஏதோ தற்செயலாக எழுதப்பட்டிருப்பதாயின் தன் எழுத்து கவனிக்கப்பட மாட்டாது; அல்லாமல் குறிப்பிட்டே எழுதியிருப்பதாயின் உரிய பதில் வந்திருப்பதை உணர்ந்து கொள்ளட்டும் என்றெண்ணி அவனும் எழுதியதே.

தொடர்ந்து கேள்வியும் பதிலுமாகக் காதல் உறுதி செய்யப்பட்டது. இந்த வகையில் அவன் தன் மாமூல் கேள்வியைமட்டும் நீக்கி வைக்க வில்லை. நீ எதற்காக என்னைக் காதலிக்க வேண்டுமென்று கேட்டான். அதற்கு அவன்பெற்றபதில், "ஒரு பெண் எப்படியும் தன்னுடன் வாழ ஒரு கணவனையடைந்தே தீரவேண்டும்; அப்படித் தன் வாழ்க்கைத் துணையாகும் அவன் குடும்பம் நடத்துதற்குரிய ஒழுக்கம், நேர்மை, பண்பாடு இவைகள் நிறைந்தவனாக இருக்கவேண்டும்; இவை தங்களிடையே நிலவக்காண்கிறேன். கண்டு தெளிந்தபின்னரே கிடைத்த சந்தர்ப்பத்தால் என் எண்ணத்தை வெளியிட்டேன்" என்று விளக்கம் தெரிவித்தாள். இவை ஓரளவுக்கு அவன் கேள்விக்குப் பொருந்திய பதிலாக இருந்தபோதிலும், அத்துடன் நிறுத்திவிடாமல் மேலும் கேள்விகளைத் தொடர்ந்தான். நீ என்னைக் கருதுகின்றபோதே வாழ்க்கையெனும் கருத்துக்கொண்டு கருதக் காரணமென்ன. காதலென்றால் திருமணம் செய்து கொள்ளவேண்டுமென்ற நியதி என்ன இருக்கிறதெனக் கேட்டான். அந்தக் கேள்வி சற்றுத்திகைப்பை ஏற்படுத்திய தெனினும், அதற்கும் நன்கு சிந்தித்து ஒரு விடையளித்தாள். "காதல் என்பது, ஆண் பெண் கூட்டுறவுக்கு வழங்கப்படும் இடுகுறிப்பெயரென்று நான் கருதவில்லை. ஆனால், வாழ்க்கையில் மக்கள் மனம்பற்றக்கூடிய எதுவும் ஒரு குறிப்பிட்டகாலம் வரை நீடித்திருந்து பிறகு அவர்கள் வயமாகவே மாறி விடுகிறது. அதேபோல இளைஞர்களின் உள்ளத்திலே ஏற்படும் எழுச்சி எண்ணங்கள் யாவும் மிக நேர்மையான முறையில் வளர்ச்சியுற்று உருப்பெற்ற பிறகு அதனைக்காதலென்று குறிப்பிட வேண்டியிருக்கிறது. காதல் என்பதே வாழ்க்கைத்துணைவர்களாகப்போகும் இருவரின் உள்ளத் தொடர்புக்குத்தான் அமைக்கப்படும் பெயராகிறது. ஏனைய; அன்பு, பாசம், பற்று, கடமைஎண்ணம் என்ற பெயர்களால் அழைக்கப்படும். பக்தியும் அதன் ஒரு பகுதியேயாகும். ஆகவே காதலித்தவர் மணம் செய்து கொண்டு வாழ்ந்து, தங்கள் வாழ்வின் பயனைப் பெற்ற பெரும்பயனை நாட்டுக்கு நல்குவதே முதன்மையாகும்" என்றுபதிலளித்தாள். அதைக்கேட்ட அவன் அவள் தன் காதலுக்குத் தகுதியுடையவள் தானெனத் தேர்ந்தான். அல்லாமலும் தன் காதல் மற்றெங்கும் நடைபெற்றறியாததோர் புதுமையாகத் திகழப் போவதை எண்ணி மகிழ்ந்தான். அதனால் காதலை வளர்த்துக்கொள்ளும் முறையையும் புதுமையாகவே பெருக்கி வந்தான். முதலில் அவனுக்கொரு அய்யப்பாடு ஏற்பட்டதுண்டு. அதாவது, நிலையும் நிகழ்ச்சியும் சந்தர்ப்பத்திற்கேற்ப சூழ்நிலையும் சேர்ந்து மாறுபட்டு விடுமோ என்ற எண்ணத்தின்பேரில் தான்

கருதிய பல கேள்விகளைக் கேட்டுக்கொண்டான். அதன் மூலம் கிடைத்த உண்மைகள் அவன் உள்ளத்தை மேலும் குளிரவைத்தன. ஆகவே மேற்கொண்ட கருத்துவளர்ச்சியோ உள்ள நிறைவோ குறைவுபடாமல் ஓங்கி வளர்ந்தது. இவ்வளவுக்கும் இடைப்பட்டு வளர்ந்து வந்த இன்ப நிகழ்ச்சிகளெல்லாம் அவ்வப்போது தோன்றிய இன்பக்காட்சிகளாக நிலவின. அதை எண்ணி யெண்ணி உள்ளம் பூரித்தான்.

இவ்வாறு வளர்த்துக் கொண்ட காதலைக் கற்பனையாலும் முன்னர்க் கேட்டுணர்ந்துள்ளவற்றிடையே செய்யக்கருதிய திருத்தங்களை இணைத்தும், மனநிலையால் வெகுதொலைவு, மிக உயர்ந்த-அளவற்ற சிந்தனைக் கோட்டைகள் கட்டிவந்தான். பெண்மையின் இலக்கணமாக அவள் திகழவேண்டுமென்பதற்காக நூலுறை உவமங்கள் முதலானவையும் இணைத்து நல்ல கருத்துக்களைக் கற்கவும், கற்றதன்படி நிற்கவும் செயற்படுத்தி வந்தான். மறை பொருள்களையும்கூட மிக நுண்ணிதாக விளக்கித் தெளிவுறச் செய்துவந்தான். அவளும் தன் கருத்துட்கொண்ட கேள்விகளைக் கேட்டுத் தெளிவு படுத்திக் கொண்டாள். இத்தகைய எழில்மேனியாள், இணையற்ற அறிவினை அணிகலனாகக்கொண்டவள் தன் இல்லாளாகப் போவதை எண்ணியெண்ணி மகிழ்ந்தான். சந்திப்பதால் உள்ளம்கலந்து உணர்ச்சிவசமாவோமோ என்றஞ்சியஞ்சி சந்திக்காமலே இருந்தான். நாட்கள் ஆண்டுகளாயின. ஒன்றிரண்டென எட்டாண்டுகளைத் தன் காதலுள்ளத்துடன் கடந்து வந்தான். ஒருநாள் அவளுக்குத் திருமணம் என்ற செய்தி கேட்க நேர்ந்தபோது உள்ளம் உடைந்து ஓய்ந்தான். அன்று அவன் செவிகளில் உலகமெல்லாம் ஒன்றுதிரண்டு 'திருமணம்' என்று ஓலமிட்டுக் கூறுவதுபோல ஒலித்தது.

அதன்முன் கருதியிராத காட்சிகளெல்லாம் அவன் கண்முன் நிழலாடின. "போடா மூடா; நீயோ கற்றறியாதவன்; அவள் கல்வியில் மேம்பட்டவள். அடுக்குமா உனக்கு அவள் பற்றிய நினைவு! காதலித்தானும் காதல்." என்று ஒரு புறம்.

"அவளெங்கே-அவளந்தஸ்தெங்கே-செல்வவளமெங்கே-சீர் சிறப்பின் தன்மையெங்கே! அன்னக்காவடி, அரைக்காசுக்குவிதியற்றவன், 'அன்றாட வாழ்க்கையைப்பற்றி முதல்நாளே முடிவு செய்து வைக்காவிடில் மறுநாள் வாழ்வு இல்லை'யென்னும் நிலையுடையவன் நீ உனக்கேனடா இந்த வீணாசை. உல்லாச எண்ணமும் உயரிய வாழ்வும் உரிய தன்மையில்தான் ஏற்படவேண்டுமென்ற உண்மை உனக்கெங்கே புலப்படப் போகிறது? புலப்பட்டாலும் உன்னுடைய உன்மத்தமதியில் எப்படி உறைக்கப்போகிறது? இப்போது உணர்ந்துகொள். இனியாவது தெரிந்துகொள்—திருந்திக்கொள்." இவ்வாறு மற்றொரு திசையிலிருந்து.

"படித்துப் பட்டம்பெற்றவள் - அவளுடன் பயின்ற மாணவிகள் 'உன்கணவனொரு பட்டதாரிதானே' யென்று கேட்டால் 'இல்லை, முட்டாள்' என்றுகூற அவளுக்கு நாணமாயிராதா? சாதி குல அந்தஸ்த்து ஏற்றத்தாழ்வு இவைகளைப் பொருட்படுத்தாமல், தற்கால நடைமுறைப் போக்கிலே நானும் வாழப்போகிறேனென்று பேசிக் கொள்ளலாம்நீ! ஆனால் நடைபெறுமா என்று சிந்திக்க வேண்டாமா?" இவ்வண்ணம் இன்னொருபுறமிருந்து எதிரொலி.

"ஏன்விழிக்கிறாய்! கண்கள் விழிப்பதுபோல் அறிவு விழிக்கட்டும்! ஒருத்தியைக் காதலிக்கிறேனென்று சொல்லுவதற்குச் சற்றேனும் பொருத்தம் வேண்டாமா? 'காதலென்பது கதைகளிலும் பேசும் படங்களிலும் காண்பதுதான்' என்று கருதாதே! 'காதல்' என்பது வரை சொல் ஒன்றுதான்-காதலரின் தன்மை பாகுபாடு ஆகியவை ஒன்றுதான். ஆனால் காதல் முற்றித் திருமணம் என்ற நிலைவரும்போதுதான் ஆபத்தை எதிர்நோக்கவேண்டியிருக்கிறது. அடிக்கடி கூறக் கேட்டுருப்பாயே காதல் ஜோடிகள் லைலா-மஜ்னு, ரோமியோ-ஜுலியட், அனார்கலி-சலீம், அம்பிகாபதி-அமராவதி; இவர்களெல்லாம் கதையிலே தான் காட்சியளிக்கிறார்கள். வாழ்க்கைக்கு வரமாட்டார்கள். ஏனென்றால்அவர்கள் காதலர்களாக மட்டுமே தோற்றமளிக்கும் முதலங்கம் தான் நீ இதுவரை கண்டுவந்தது - இனிமேலும் காணப்போவது-காண இருப்பது. அதைத் தவிர அவர்கள் வாழ்க்கைச் சுவட்டிலே கால்தூக்கிவைக்கப்போகும்போதுதான், வாழ்நாளின் தொடரோவியம் முற்றுப்பெறுகிறது.

ஏழை பணக்காரனென்ற பாகுபாடுகளைக் கடந்து, எண்ணற்ற இன்னல்களையேற்று, ஆற்றொணாத் துன்பங்களையும் அணைத்துக் கொண்டிருந்தும் திருமணம் என்ற நிலை தான் லைலா-மஜ்னுவின் மரணகாவியம் தந்தது.

எதிர்ப்போரின் ஆற்றலையெல்லாம் எதிர் நின்றே அழித்தொழித்து இறுதிப் பருவம் வரை வாழ்வோமென்ற நம்பிக்கையில் வாழ்நாளை எதிர்நோக்கியிருந்தவர்கள் சாவின்எதிர்

நிற்கலானார்கள். மன்னன் மகன், மற்றோரினப் பெண் என்றாலும் மகிழ்ச்சியிலே மாற்றமில்லை என்ற ஏற்றமுற்று இதயங்கலந்தோர்-மணத்தின் காரணத்தால் மரணத்தை ஏற்றனர்; அதேபோலத்தான் முந்தியதோ பிந்தியதோ என்னும் படியாகச் சோழன் ஆட்சியில் இசை வல்ல கவிவாணன், அரசகுமாரியை அடைந்து காதலித்தான்-காதலித்தனர். மணத்தின்முன்னரே மரணந்தான் அவர்களை வரவேற்றது.

பருவத்தாலும் பழக்கங்களாலும் அவள் உள்ளத்தைக் கொள்ளைகொண்டு விட்டான்- உள்ளக்கருத்தின் தன்மையை அறிந்து கூறுவது பொய்யென்று தெரிந்திருந்தும் தன்னை ஒரு சிப்பாயெனச் சொல்லியே அவளது இதய மாளிகையின் இன்பப்பொருளானான். அது மட்டுமல்ல கூறியது போலவே வாழ்நாளிலும் சிப்பாயாகஅல்ல ஏனைய சிறுகுடல் வாழ்க்கையெனினும் ஏற்கக்காத்திருந்தான். உண்மையை அவள் உணர்ந்து அவனிடம் ஊடல் கொண்டபோது தான் கூறியதை உண்மையாக நிகழ்த்திக் காட்டுவேனென்ற உறுதியும் தந்தான். ஆனால் பணமென்னும் ஒருசொல்லுக்கு இலக்காகவேதான் இருவரும் கல்லறைக்கு உள்ளும் புறமுமாகினர். இதேபோல காலத்தால் முந்தியதோ பிந்தியதோ என உறுதியிட்டுக் கூற முடியாவிட்டாலும் ஒருப்போலவே அமைந்து ஆட்சியால் மட்டுமே மாறுபட்ட உறுப்பினர்களைக் கொண்ட மற்றோர் காதலரிணைப்புக்காவியம் அம்பிகாபதி-அமராவதி காதலுறவு.

ஒன்று மொகலாய ஆட்சி, மற்றது சோழன் ஆட்சி, அங்கே அக்பர்-இங்கே குலோத்துங்கன் : ஒரு சார்பில் கவிப்பாடிப் பிழைக்கும் கம்பர் மகன் அம்பிகாபதி : இன்னொரு சார்பில் ஏழைக்குடியில் பிறந்து ஆடிப்பிழைக்கும் அனார்கலி : தன் இதயமன்னனென எண்ணிக் காதல் கொண்டாள் அனார்-காவிய மன்னனென அறிந்து உள்ளங்கொண்டாள் அமராவதி : மன்னனின் சீற்றத்தால் ஆடலணங்கின் காதல் சிதைக்கப்பட்டது - குலோத்துங்கனின் குமறலால் அம்பிகாபதி கொல்லப்பட்டான். குடிப்பெருமையும் கொண்ட எண்ணத்தின் குரங்குப்பிடியும் தான் இரண்டு வரலாற்றிலும் காணக்கிடக்கிறது. காரணமென்ன ? காதலின் கடைசி நிலை அதுதான்.

சமுதாயம் என்று ஒன்று இருப்பதாகக் கூறுகிறார்களே தெரியுமா உனக்கு ? சமுதாயமென்ற அச்சொல் மிகவும் பயங்கரமானது. வெளுப்பாகவே இருக்கும் நஞ்சு-கற்கண்டுத் தூள்போல் தரும் கண்ணாடித்தூள்-மகிழ்ந்தே இருப்பவனை மற்றவரறியா வண்ணம் அவனும் உணராமுன்னம் மரண வாசலுக்குள் இழுத்துச்செல்லும் நோய். என்பதை மறவாதே! நாகரிகம் தோன்றி இன்று வரை, விஞ்ஞானத்தால் உலகையே ஆட்டிப் படைக்கத்தக்க காலத்தும் சமுதாயம் என்னும் சொல்லின் பெயரால் நிகழும் சதி-மதியொவ்வா மடமைச் செயலைமாற்ற யாருமில்லை. ஏன் தெரியுமா? அவரவர்களும் சமுதாயத்தின் படியிலே உழன்றுஉழன்று உரைக்க இயலா ஊமையர்களாக ஓய்ந்து விட்டனர். கவனக்குறைவாலல்ல...கண்ணிற்படாததால். பின்னர் அதன் வேகத்திற்கு ஆட்படும்போது அஞ்சி அடிபணிகின்றனர். அழிகின்றனர் அல்லது அவல வாழ்வை அடுக்கின்றனர்.

ஆயினும் உன் முரட்டு நடவடிக்கைகளினாலும் முன்னோக்காப் போக்கினாலும் காலங்கடத்தி வந்திருப்பதால் சமுதாயத்தை சந்திக்க வில்லை. ஆனால் அதன் பிடியில் நீ வந்தே ஆகவேண்டும் என்ற உண்மை இருப்பதை நீ உணரவில்லை. நீ என்ன? அசகாய சூரர்கள் என்று பிறர்கூற அஞ்சுகின்றவர்களும் அதன்முன் எதுவும் செய்ய முடியாது. எண்ணிப்பார்! காதலுக்கு வேலியிட்டுக் காத்துப் போற்றிவந்தால் மட்டும் போதாது. அது நம் கையை விட்டுப் போய்விடுமென்ற எண்ணத்தையும் முதலிலேயே சிந்தித்திருக்க வேண்டும். அப்போதுதான் கிடைக்காமல் போனதை எண்ணி வருந்தும் நிலை வராது. இவை உலகம் தோன்றி வளர்ந்து பரந்துள்ள இற்றைநாள்வரை காணக்கிடைக்கும் காதல் எடுத்துக்காட்டுக் காட்டப்படாதன எண்ணற்றிருக்கலாம். அவைகளை நினையாதே என்று இடித்துக் கூறுவதுபோல் வேறோர் திக்கிலிருந்து வரும் பெருங் குரல்.

இவற்றைக் கேட்டவண்ணமே அயர்ந்து சாய்ந்திருந்தான். அலைமோதும் உள்ளத்திற்கு அமைதிதந்து ஆற்ற, இவற்றை அடுத்தவரிடமாவது கூறி ஆறுதல் பெறுவோமென்றால் கிட்டவருபவர் எவருமில்லை. எனவே எண்ணியெண்ணி ஓய்ந்தான்.

நாட்கள் செல்லச்செல்ல அவன் உள்ளம் கொண்டிருந்த காதல் எண்ணம் அன்பாக மாறியது. அப்போது எண்ணிக்கொண்டான்; அவள் முன்னைய நிகழ்ச்சிகளைத் தற்போது தன் வாழ்க்கையிலே கண்டு மகிழ்ச்சி கொள்வாளென்று அவளும் எண்ணினாள். எத்தனை எண்ணிக் கொண்டாலும்-அது உண்மையாயிருந்தாலும் அவன் வாழ்க்கையோ! பாலை வனம்!

தமிழர் சமூக வாழ்க்கை

திரு. அர. சு. நாராயணசாமி நாயுடு, எம். ஏ. செந்திற் குமார நாடார் கல்லூரி, விருதுநகர்.

தமிழர் சமூகவாழ்க்கையின் பல கூறுகளைப் பற்றி யறிஞர் பலர் ஆய்ந்தெழுதுகின்றனர். ஆதலின் தலைப்புப் பெரியதாகத் தோன்றினும் சில கூறுகளைப் பற்றிச் சில கூறுதலே இக்கட்டுரையின் நோக்கமாம்,

I

தெளிவாக அறிந்துகொள்ள முடியாத மிகப் பழங்காலத்தே தமிழர் தமிழ் நாட்டெல்லையுளகப்படாத பல நிலமக்கட் சமூகங்களொடு ஓரளவு தொடர்புகொண்டுவிட்டனர். ஈழ நாட்டார், வடுக நாட்டார், வடவடுகராகிய ஆரியர், மிலேச்சர், யவனர் இவர்களைத் தமிழர் நன்கறிந்திருந்தனர். தமிழ் நாடு கடல் கடந்து பல நாடுகளொடும் வணிகத் தொடர்புடையதாயிருந்தது. பிறபல நாட்டார் இந்நாட்டில் வந்து வதிவாராயினர்.

தமிழ் மூவேந்தர் திறம்படப் 'படைகுடி கூழமைச்சு நட்பரண்' ஆய எல்லா முடையராய் அரசோச்சிப் பிறநாடுகளிலும் நன்கறியப்பட்ட காலமே கி. மு. நான்காம் நூற்றாண்டுக்கு முன்னதாதல் வேண்டுமென்பது அசோகன் கற்றூண்களாலும் காரவேலனது ஹாதிகும்பக் கல்வெட்டாலும் அறியப்படுவதொன்று.

இன்று நமக்குக் கிடைத்திருப்பனவாய பழைய இலக்கண விலக்கியங்களால் இந்நிலையுடையராயிருந்தனர் தமிழர் என்பது தெளிவாகிறது.

இப்பழ நூல்களையாய்ந்தால் இதனினும் முன்னைய நிலையும் ஓரளவு அறியப்படுதலாம்.

அகத்திணை பற்றிய இலக்கணக் குறிப்புக்களால் ஐந்திணைப்பிரிவும் அவ்வத்திணைக்குரிய முதலுரிகருப் பொருள்களுமறிகிறோம். கருப்பொருளில் ஒரு பகுதியாக மக்களைக் கூறுங்கால், தலைமக்கள் நிலைமக்களென்ற பகுதியினரை யறிகிறோம். ஆயினும் அவ்வத்திணைக்குரிய அரசராவாரைப்பற்றி யேது மறிந்திலோம்.

நாட்டு நடப்பு மாறிக் காலப்போக்கி லமையினும் அது நூலகத்திடம் பெறல் மிகத் தாழ்த்தேயாம்.

தாமிழ்நாடு சிறுசிறு கூருகப் பிரிந்து அவ்வக் கூற்றிலுள்ள பெரும்பான்மையான மக்களின் தலைவரே சாதித்தலைவராக அரசோச்சிய காலத்தை யிலக்கணக்குறிப்புகளறிவிப்பனவாகலாம். முடியுங்குடையுமிலராய்ச் சாதித் தலைவர்களாய் மழவர் கோமான், களவர் கோமான் முதலியோர் நாட்டுத் தலைவராயாண்டமையைச் சங்கநூல்களாலும் அறிகிறோம்.

இவ்வாறு மழவர், களவர் முதலிய பலசாதி அல்லது குடியினர் தத்தங் குடிக்குத் தனியாட்சி கொண்டு விளங்கிய நெடுங்காலத்தின் பின்னரே அவர்கள் குடியாட்சியைச் சிறுகச் சிறுகத் தேய்ந்து முடிவேந்தார் கோலோச்சும் நிலை முதிர்ந்திருக்கும்.

சங்க நூல்களாலறியப்படும் வேளிர் முதலியோருடைய ஆட்சிக்கூறுகளைத் தமிழ்நாட்டுப் படத்திற்குறித்து நோக்கின் போக்கு வரவுக்கு வசதியில்லாத மக்கள் நிலைத்துள்ள கோடிகொடங்குகளில் கி. பி. நான்காம் நூற்றாண்டுவரை இக்குடியாட்சிகள் நிலைத்து வலுவொடு திகழ்ந்தமை பெறப்படும்.

எனவே தமிழர் சமூகம் முதலில் குடித்தலைவரது ஆட்சியுள் நின்று, பின்னர்க் குடித்தலைவர், முடியரசர் இவ்விருவராலும் ஆளப்பெற்றுக் காலப்போக்கில் வேத்தாட்சிக் குட்பட்டமையைக் காண்பதற்கு இதுவரை கூறியவை யிடந்தரலாம்.

II

ஆட்சிவகை இவ்வாறு மாறி வளர்ந்தமை போன்றே சாதிப்பிரிவுகளும் வளர்ச்சியுற்றிருக்கலாம்.

அகத்திணை மக்களாகப் பார்ப்பார், அரசர், வணிகர், வேளாளரிவர், குறிக்கப்பட்டிலர். எனினும், தொல்காப்பியத்திலே இவர்களைப் பற்றிய குறிப்புக்களுள்ளன.

வளைவு, சுற்று என்று தமிழ்மக்கள் தங்கள் குடியிருப்புக்கும் பெயர் தந்துள்ளனர். பெரியதாக வளைத்துக் கட்டப்பட்டு ஒரு குடியினர் வாழுமிடமே வளைவெனப் பட்டதுபோலும். ஒருவனைச் சுற்றிலும் வசதியும் இயல்பினர் அவன் சுற்றமேபோலும். இவ்வாறான தனி நிலை மாறிப்பொருள் தேடல், இடம் நாடல் முதலிய காரணங்களால் சமூகம் சார் நிலை பெற்றுப் பெருகியபோது, சில தொழில்களிற் சில கூட்டங்கள் திறன் பெற்றோராய்த் தனி நிலை பெற்றிருப்பர்.

அந்நிலையிற் பழ நூல்களிற் பாணன், பறையன், பொருநன், மறவன் என்ற தொழிற்றிறக் கூட்டங்களைக் காண்கிறோம். அவர் தம்முள்ளே கொள்வன கொடுப்பனவாய உறவால் தனிச்சாதியினராயினர். வடவாரியர் தொடர்புற்றான் பார்ப்பனர் முதலிய பிரிவுகள் இங்கே கொள்ளப்பட்டிருக்கவேண்டும். சங்க நூல்களில் பார்ப்பனரைப்பற்றிய குறிப்புக்கள் அவர்கள் இந்நாட்டிற் குடியேறி இந்நாட்டுப் பழக்கவழக்க மரபுகளில் முழுத்தோய்வு பெறாதாராகவே காட்டுகின்றன.

'நால்வேத நெறி' யூபம் நட்டு வேள்வி செய்தல் முதலியன பிறர் கலப்பாற்றமிழர் சமூகமறிந்தபோதும் மேற்கொண்டபோதுமே 'நால் வருண' வெண்ணமும் வளர்ந்திருக்கும். சங்கப் பழம் பாடல்களில் இந்நிலையிந் நாட்டில் நுழைந்தமை குறிக்கப்பட்டுள்ளது.

சிலப்பதிகாரத்தில் நால் வருணங்களும் அவற்றுள் முதலது இரண்டாமது மூன்றாமது முதலிய தெளிவான குறிப்புக்களுங்காண்கிறோம், எனவே, கி. மு. ஆறும் நூற்றாண்டளவில் 'நால் வருண'ப் பகுப்பு தெளிவான உருப் பெற்றுவிட்டது நம் நாட்டிலெனக் கொள்ளலாம்.

வலங்கை யிடங்கைச் சாதிகள், அநுலோமர் பிரதிலோபர் பிரிவுகள் முதலியனவும் பத்தாம் நூற்றாண்டு முதலறியப்படுவனவாம்.

ஒரு கூற்றிலேயுறைந்த மக்கள் ஒருசாதியினராயிருந்தது மாறிப் பலபட விரிந்து பல்வகை யுயர்வு தாழ்வுகளொடு சமூகங் காட்சியளிக்கத் தொடங்கிற்றுப் பத்தாம் நூற்றாண்டில்.

அதன் பின் தெலுங்கர், கன்னடர் முதலியோர் நாட்டிற் பல்கினர். புதிய பிரிவுகள் வளர்ந்தன. இன்றோ எண்ண முடியாத பல சாதிகளாகத் தமிழர் சமூகம் பிரிந்து கிடக்கிறது.

முகம்மதியர் கிறிஸ்தவர் முதலியோர் தொடர்பும் அதன் முன்பே ஜைன பௌத்த மத நுழைவும் பிற்காலத்தில் மேலைப் புலக் கருத்துக்களின் அறிவுமாகிய இவை பரவியச் சாதிகளின் பிரிவுக் கொடுமையைத் தலைதட்டி வைத்துள்ளன.

தமிழ்நாடு காலப்போக்கில் விளைந்த அறிவியல் வளர்ச்சியாலும் வேறு பல மாறுதல்களாலும் நிலப்பரப்பு மொழிவகை யிவை தேய்ந்து ஒரில்லமெனத் தோற்றமளிக்கு மிக்காலம் தமிழரெல்லோரும் ஒரே சாதியினரென்று கொள்ளத்தக்க பெருநிலையினைச் சிறுகச்சிறுக வளர்ந்தே தீருமென நம்பலாம்.

III

பாண்டிய நாட்டிலே சங்கங்கள் உயர்ந்தனவென ஒரு நம்பிக்கை தமிழரெல்லோரிடையும் பரவியுள்ளது. வேந்தரும் வேளிரும் கற்றுத் துறைபோய புலவர்களைச் சுற்றமெனப் பேணியமை பழநூல்கள் காட்டும். இசையுங் கூத்தும் வல்ல பாணர் பொருநரிவரும் பெருமதிப்புக் குரியராய் வாழ்ந்தமையும் அந்நூல்களாலறியலாம்.

இந்நாட்டு மக்களது கல்விநிலையைப் பற்றிக் கருதுவோம்.

சங்க வரலாறு, இலக்கண நூற்பாயிரங்களிலே கூறப்படும் ஆசிரியரிலக்கணம், மாணவரிலக்கணம் இவற்றை நோக்கின் தமிழர் சமூகம் கல்வியறிவு பெற்றுத் தழைத்த தொன்றே யென வெண்ணலாம். மதுரைக் கணக்காயனார் முதலிய பெயர்களாலும், இறையனாரகப் பொருளுரை ஆசிரியர் மாணவர்க்குரைத்து வழிவழியாக வந்து பின்ன ரெழுதப்பெற்ற தென்பது கொண்டும், 'கந்தனைய னையவர்கலை தெரிகழகங்' கள் பற்றி நம் பெரும் புலவர்கள் குறிப்பது கொண்டும் தமிழர் கல்விகற்று ஆராய்ச்சியுடையரா யிருந்தனரெனலாம். கல்வியின் பெருமையையும் கற்கவேண்டுவதன் இன்றியமையாமையையும் குறளேயன்றி வேறு சில சங்கப் பாட்டுகளுங் கூறுகின்றன.

எனினும், பழநூல்கள் தவிரப் பிற சான்றுகளெல்லாம் நம்மை வேறொரு வழியில் எண்ணத் தூண்டுகின்றன.

கி. பி. ஆறும் நூற்றாண்டுவரை தமிழ்க்கல் வெட்டுக்கள் காணக் கிடைத்தில. தமிழ் நாட்டிற் காணப்படும் பழைய குகைக் கல்வெட்டுக்கள் பிராமி யெழுத்தி லெழுதப்பட்டுள்ளன. இவையும் பெரும்பாலும் ஜைன பௌத்தச் சார்பான குறிப்புக்களையே உடையன.

ஜைனம் பௌத்தம் வேதநெறியாகிய இவை தமிழர் சமூகத்திற் பரவியபின், தமிழ் நாட்டில் சமஸ்கிருதக் கல்விபற்றியே பல குறிப்புக்

களுள்ளன. தமிழிலக்கண இலக்கியம் புலமை யூட்டும் பள்ளிகளைப் பற்றியெதுவுந் தெரிந்திலது.

இத்தகைய மோசுகந் தமிழர் சமூகத்திலேற் படக் காரணமென்ன வென்பதை யறிஞர்கள் ஆராயவேண்டும். காரணமெதுவாயினும தமிழர் சமூகத்தின் தனிநிலையை-பெருநிலையை இக்கல்வி யேற்பாட்டுக்குறைபாடு குறைத்த தென்பதிலையமில்லை.

'நால் வருணப் பிரிவு' நமக்கு மேற்றதே யென்று கொண்டபின் தமிழர் முதல் வருணத் தார்க்கே கற்கு முரிமையையும் விட்டுக் கைகட்டி நின்றனர் போலும். கல்வியேற்பாடு களில் இருந்த குறையையும் எதிர்த்துக் கம்பர், சேக்கிழார், செயங்கொண்டார், புகழேந்தி போன்ற பெரும்புலவர் இடைக்காலத்து விளங்கியமை தமிழர் சமூகக் கல்வியவாவின் உறுதியையே காட்டத் தக்க சான்றுபோலும்.

தமிழர் சமூகத்தில் மேற்படிகளில் நின்றோர் மட்டுமின்றிக் கீழ்ப்படியினருந்தங் கொள்கை களை யறியவேண்டுமென்று ஜைன பௌத்த வைதிகர்கள் கருதிய காலத்தேதான் அக் கொள்கைகள் நிரம்பிய தமிழ் நூல்கள் வெளி வரலாயின.

காஞ்சியிலே கடிகையிருந்தது. கி. பி. நான் காம் நூற்றாண்டிலேயே அது விளங்கியமை தெரிகிறது. அங்கே பார்ப்பனரே வேத முத லியன கற்றனர்.

காவேரிப் பாக்கத்தில் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில் வைணவப்பிராமணர் படிப்புக்கு வசதியளிக்கும் மடமிருந்தது.

பதினொன்றும் நூற்றாண்டில் நாகைக்கடிகை ஆசிரியர் பலரையுடையதாய் மாணவர் பல ருக்கு உண்டியு முறையுளுமுதவி வேதசாத் திரக் கல்வியளித்தது. இந்நூற்றாண்டில் இம் முறையிலமைந்த படிப்பிடங்கள் எண்ணாயிரம், திருபுவனி, திருமுக்கூடல் முதலிய இடங்களி லும் அமைந்திருந்தன. திருவாடுதுறையில் சம்ஸ்கிருதத்திலுள்ள ஆயுர்வேத நூற்கல்வி கற்பிக்கும் பள்ளியொன்றிருந்தது.

தமிழ் மன்னர் இப்பள்ளிகட்கு இறையிலி யாக நில முதவியதோடு வேறு பலவகையில் ஊக்கினர்.

பதினேழாம் நூற்றாண்டில் மதுரையில் மதம் தத்துவ மிவைபற்றிப் பத்தாயிரம் மாணவர்கள் பயின்று வந்தனராம். எல்லோரும் பிராமணர்களாம்.

எனவே, களப்பிரர் குழப்பத்துக்குப்பின் சம்ஸ்கிருதக் கல்வி தமிழ்நாட்டில் தழைப் பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைப் பல்லவரும் பாண்டியரும் சிறக்கச்செய்தனர். பதினெட் டாம் நூற்றாண்டுவரை யிந்நிலையில் பெரு மாறுதலில்லை,

தத்தம் தொழிலைத் தங்குல வித்தையாகப் பயில்தல், விழா முதலிய சிறப்புக் காலங்களில் கற்றோர் எடுத்துரைப்பனவற்றைக் கேட்டு நல்லன வறிதல் என்ற நிலையில்தான் தமிழர் கல்வி யிருந்தது.

தமிழ் நாட்டில் நெடுங்காலமாக வதிந்து தமிழ் நாட்டுக் குடிகளாகி விட்டவர் எவரெனி னும் தமிழரே. அவர் தமிழர் சமூகத்துக்குப் புறம்பானவரல்லர். முன்பொரு காலத்தே பலப்பல காரணங்களால் ஆரியர், தெலுங் கர், கன்னடர், ஹிந்துஸ்தானிகள், மராத்தி யர்கள் என்போர் இங்கே வதிந்தும் இங்கே வேர் கொள்ளாது தாமரையிலை மேற்றண்ணீர் போல இருந்திருக்கலாம். அக்காலமும் அந் நிலையும் மலையேறிவிட்டன. பழந்தமிழர், வந்து குடியேறியோர் கொள்கைகளை யொப்பித் தம மைத் தாழ்த்திக்கொண்டு நின்றனர். தமிழ் நாட்டரசரும் சம்ஸ்கிருத கல்விக்குத் தழைப்பு நல்கி ஊரார் பிள்ளையை யூட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும் என்றிருந்தனர், நல்லறிவு இந்தப் பொய்க்கோட்டைகளைத் தகர்த்தெறிந்துவிட்டது.

இன்று இங்கு நிலைத்து வாழ்வோர் எல் லோருந் தமிழர். இவருள் உயர்வு தாழ்வு களும் படைத்துக் கொள்ளப்பட்டனவே அவையும் பட்டு மாய்ந்து கொண்டிருக்கின் றன. படிப்பதற்குரியோர் இன்னவர் என்னும் வரையறையிருந்த இடந்தெரியாது அழிந்து போயிற்று.

எனவே 'எல்லோரும் தமிழர்' என வெழுச் சியோடெண்ணித் தமிழ்மொழி பேணி வளர்த் துத் தமிழாராயோர்க்கு வேண்டுவதாய பரந்து பட்ட அறிவு முழுவதையுந் தமிழிலே கற்றுப் பழம்பாடங்களை வரலாற்றுலுணராது இன் றும் தமிழரையாளும் நிலையுடைய தமிழர்தம் மொழியைத் 'தானே வளரும்' என்று விட்டு ஊரார் மொழிகளை 'யூட்டிவளர்ப்பர்' எனின் அது தருவதாமா? நம் நாட்டுக்கல்வியின் முனைப் பழம் பெருமையையும், பின்னுண் டாய இழிவையுங்கண்டு எண்ணிப் பார்த்துத் தக்கதே செய்வாராக.

இக்கட்டுரை காட்டிய தமிழரசு பற்றிய குறிப் புக் காட்சிப் பழம் பொருளே. தமிழர் சமூகச் சாதி பற்றிய குறிப்பும் கல்வி பற்றிய குறிப்பும் எதிர்காலத்துக்கேற்ற நற்பாடங்களை யேற்க வுதவுவனவாக.

(மதுரைத் தமிழ்ச் சங்கப் பொன்விழா மலர் 1956)

"ஐக்கிய" ஐரோப்பா!

அமெரிக்க ஐக்கிய நாடுகள் இருப்பதுபோல, ஐரோப்பாவிலுள்ள எல்லா நாடுகளையும் ஒன்ருக்கி, "ஐக்கிய ஐரோப்பிய நாடுகள்" என்ற அமைப்பை உண்டாக்கவேண்டுமென்று பலர் நினைத்ததுண்டு.

19ம் நூற்ருண்டின் ஆரம்பத்தில் "ஐக்கிய" ஐரோப்பா உண்டாக்க வேண்டும் எனச் சிலர் ஆரம்பித்தனர், வெவ்வேறு நோக்கங்களுடன். முதலாவதாக, பிரான்சில் குடியாட்சியைச் சாய்த்துவிட்டு, முடியாட்சியை ஏற்படுத்திக் கொண்ட நெப்போலியன் ஐரோப்பா அனைத்தையும் ஒரு குடைக்கீழ் கொண்டுவரத் திட்டமிட்டான். அவ்வாறு கொண்டுவரமுடியுமென்ற நம்பிக்கையை அவனுக்குத் தந்தது, அவனிடமிருந்த படைபலம்! அவனுடைய படைபலம் உச்சநிலையிலிருந்த சமயம், கிழக்கே ருஷிய நாட்டு எல்லையிலிருந்து, மேற்கே போர்ச்சுகல் கடைசிவரை, ஐரோப்பாவின் பெரும்பகுதி அவன் ஆட்சிக்கு அடங்கியிருந்ததென்றே சொல்லவேண்டும். அந்த "ஐரோப்பா"—ஐரோப்பிய நாடுகள், அடக்கு முறையின் கீழ் ஒன்ருகக் காணப்பட்டதேயன்றி, நெப்போலியன் ஆட்சி விழுந்ததும், படைபலம் நொறுங்கியதும், கட்டு அவிழ்ந்து பழைய நாடுகள் பிரிந்து காட்சியளித்தன.

படைவீரர்கள் மட்டுமல்ல, அரசியல் வாதிகள்கூட "ஐக்கிய" ஐரோப்பாவிற்காகப் பரிந்து பேசியிருக்கிருர்கள். சென்ற நூற்ருண்டில், மாஜினி, கரிபால்டி போன்ற அரசியல் தலைவர்களும் "ஐக்கிய" ஐரோப்பாவை ஆதரித்துப் பேசினர்கள். அப்பொழுது நிலையான இயக்கம் உருவாகவில்லை.

1922ல் மீண்டும் "ஐக்கிய ஐரோப்பா" என்ற பேச்சு துவங்கப்பட்டது. பிரெஞ்சு நாட்டு முதலமைச்சராக—இருந்த பலமுறை இருந்த பிரையா என்பவர் ஆரம்பித்துவைத்தார். "ஐக்கிய ஐரோப்பா" ஏற்பட்டால் சண்டைகள் தவிர்க்கப்படலாம் என்ற எண்ணம் பரவி, அதற்கு ஆதரவாளர்கள் சேர ஆரம்பித்தனர். 1926ல் வியன்ன நகரில், "ஐரோப்பிய நாடுகள் கூட்டு மாநாடு" கூடியது. ஐரோப்பா நாடுகள் எல்லாவற்றிலுமிருந்து பிரதிநிதிகள் மாநாட்டுக்கு வந்திருந்தனர். அந்த மாநாட்டைத் தொடர்ந்து, 1930-ல் பெர்லினிலும், 1932ல் பேசில் என்ற இடத்திலும் "ஐக்கிய ஐரோப்பா" மாநாடுகள் நடந்தன.

1933ல் இட்லர் ஆட்சிக்குவந்தான். "ஐக்கிய ஐரோப்பா" "ஒன்றுபட்ட உலகம்" "அதற்காக ஒரு ஆளும் வர்க்கம்" என்று இட்லரும் கூறிவந்தான். தனது நோக்கப்படி, இட்லர் ஐரோப்பாவை ஒன்றுபடுத்த முயன்ருன். நெப்போலியன் காலத்தில் நிகழ்ந்ததைப்போல, படைபலத்தால் ருஷிய எல்லையிலிருந்து போர்ச்சுகல் வரை "ஒன்றுபட்ட ஐரோப்பா" உண்டாக்கப்பட்டது. அதுவே நிலைபெற்றதா என்ருல், இல்லை! இட்லரின் படைபலம் சரிந்து, இட்லர் வீழ்ந்ததும், அடங்கிக்கிடந்த நாடுகள், துப்பாக்கிமுனையில் ஒற்றுமையாக்கப்பட்ட ஐரோப்பிய நாடுகள் தங்களது சுயாட்சி உரிமையைப் பெற்றன.

ஒவ்வொரு சண்டைக்குப் பின்னும், அமைதி ஒப்பந்தங்கள் எழுதப்படுகிற நேரத்தில் ஐரோப்பா கண்டத்தில் புதிய நாடுகள் உரிமைபெற்றுத் தனிநாடுகளாகக் காட்சியளித்தன. ஐரோப்பாவிலுள்ள தனிநாடுகளின் எண்ணிக்கை வளர்ந்தது. சண்டை சச்சரவு உண்டாவதற்கான காரணங்கள், நாடுகளின் எண்ணிக்கையில் இல்லை; மக்களிடை உலவுகிற எண்ணங்களில்தான் இருக்கின்றன. எண்ணங்களில் அமைதியும், ஜனநாயகப் பண்பும் ஏற்பட்டால் சமவுரிமையுடன் எல்லோரும் தனியாகவோ, கூட்டாகவோ வாழமுடியும்.

வெளிவந்துவிட்டது !

ஆசிரியர் :

இரா. செழியன், எம். ஏ.,

மூன்று சிறு நாடகங்களின் தொகுப்பு

"போராட்டம்"

விலை ரூ. 2-4-0

கிடைக்குமிடம் ;

பாரி நிலையம்

59, பிராட்வே : : சென்னை - 1.

தமிழ்நாட்டில் தலைசிறந்த

வெண் சங்கு சீயக்காய்தூள்

எங்கும் கிடைக்கும்

எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

செல்வம் — ராணி ஊதுபத்திகளை

வாங்கி உபயோகியுங்கள்

நறுமண சீயக்காய்தூள்

வெண் சங்கு

ரிஜிஸ்டர் No. 13817

தயாரிப்பாளர் :- வெண்சங்கு சீயக்காய்தூள் தொழிற்சாலை

3037-38, டபீர் குளம் ரோடு, தஞ்சாவூர்.

"மன்றம்" அச்சகத்தில் (26, நைனியப்பன் தெரு, மண்ணடி சென்னை-1)

ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகி